





# ஞானச்சுடர்

## மலர்

புரட்டாதி 2003




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**



உ

# குறள் வழி

" துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்
தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிடு பவர்.

பொருள்:-

தீயவர் சொல்லும் வெறுக்கத்தக்க சொற்களைப் பொறுத்துக் கொண்டிருப்பவர் துறவிகளிலும் பார்க்கத் தூய்மை உடையவராவர்.



உ

# நற்சிந்தனை

## ஆசான் அருள்


கலிவிருத்தம்

பூவும் மணமும் போலப் பொலியும்
நாவுஞ் சுவையும் போலத் தெளியும்
தேவுக் கடியார் செய்யுந் தொழிலும்
நாவுக் கெளிதோ நாமறி வோமோ

ஒன்றும் இரண்டும் மூன்றும் ஐந்தும்
நன்றுந் தீதும் நாளுங் கோளும்
ஒன்றி லொன்றி இருக்கு முபாயம்
கண்டு கொண்டவர் கலங்காச் சித்தரே.

திங்களுங் கங்கையுஞ் சீறும் பாம்பும்
மங்கையும் மானும் மழுவுஞ் சூலமும்
அங்கியு முடுக்கையும் அரங்கனும் பொலியும்
சிங்காரங் கண்டார் சீவன் முத்தரே.

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு—2 சுடர் 69

## 2003 புரட்டாதி

## பொருளடக்கம்


| | |
|---|---|
| கலியுகவரதனாம் கண்கண்ட தெய்வம் ...... | 1 - 2 |
| திருவருட்பயனின் வசனரூபம் | 3 - 4 |
| சிக்கனமாய் வாழ்வோம் | 5 - 9 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும் ...... | 10 - 13 |
| யார் இந்த(ச்) செல்லம்மா | 14 - 16 |
| தாய் நாட்டிலும் சேய் நாட்டிலும் ...... | 17 - 20 |
| அரை நிமிட நேரம் | 21 - 22 |
| ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி | 23 - 25 |
| கோளறு திருப்பதிகம் | 26 - 29 |
| நித்திய அன்னப்பணிக்கு உதவி ...... | 30 - 31 |
| ஔவையார் அருளிச்செய்த நல்வழி | 32 - 33 |
| சித்தர்கள் கூறும் கடவுள் கொள்கை | 34 - 36 |
| சந்நிதியான் | 37 - 40 |
| சந்நிதியான் நூல் வெளியீடு | 41 - 42 |


அன்பளிப்பு:- மலர் ஒன்று 30/- ரூபா

வருடச்சந்தா தபால்ச் செலவுடன் 385/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு: அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு

உ

## விநாயகர் துதி

கோணிய பிறையணிந்த கோமான் உமைபாலா!
மாணிக் கருளவேண்டி காலனை யுதைத்த தண்
வேணியான் திருமகனே! வேலனுக்கு முன் தோன்றலே!
வாணி போற்றும் விநாயக! வரமருள்வாய் உலகுய்ய!

# சந்நிதி வாழ்வே! அறங்காத்தருள்வாய்

செந்திலுறை முருகா செல்வச் சந்நிதி மேவும்
கந்தவேளே கருணை செய்வாய் களங்கமற உன்னை
வந்திப்போர் பவந்தீர்த்து வாழ்வாங்கு வாழ்ந்துய்ய
சிந்தித்தே வேண்டுகின்றோம் திருவருள் புரியுமையா!

தொண்டைமனாற்று வடகீழ்த் துறையிற் கோயில் கொண்டு
தொண்டு செய்யும் அடியவரின் தொல்லை நீக்கி என்றும்
கண்டுனையே வந்திக்க கருணைபுரி கந்தப்பா!
முண்டு மனந் தெளிய முருகையா வரமருள் வாய்!

ஆறுபடை வீடு கொண்டாய் தமிழகத்தில் அனைத்துலகின்
சீறுகின்ற தீவினைகள் நீறாக்கி அருள்புரிய
நீறு சேர் மேனியா நெற்றிக் கண்ணிலுதித்த
ஆறுமுகத்தரசே! சந்நிதி வாழ்வே! அறங்காத்தருள் வாயே!!!

உ

# " ஞானச்சுடர் "

## ஆவணி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

வெளியீட்டுரையை செல்வி சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் வழங்கினார்கள். ஆச்சிரமம் என்பது சித்தர்கள், முனிவர்கள், அடியவர்கள் எல்லோரும் கூடுகின்ற இடமாகக் கருதப்படுகிறது. அத்துடன் ஆச்சிரமம் சேவைகள் செய்கின்ற இடமாகவும் விளங்க வேண்டும். இந்த வகையில் சந்நிதியான் ஆச்சிரமமும் மயில்வாகன சுவாமிகளைக் குருவாகக்கொண்டு செயற்பட்டு வரும் அதே நேரம் இங்கே பல சித்தர்கள், முனிவர்கள் நடமாடிக் கொண்டிருப்பதையும் காண முடிகிறது. அத்துடன் பல்வேறு சேவைகளையும் மிகச்சிறப்பாக இந்த ஆச்சிரமம் ஆற்றி வருகின்றது. அவற்றில் இந்த ஞானச்சுடர் சஞ்சிகையும் ஒன்றாக விளங்குகின்றது என தமது கருத்துக்களை செல்வி க. சசிலேகா அவர்கள் வழங்கினார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

மதிப்பீட்டுரையை திருமதி மங்கயர்க்கரசி சிற்றம்பலம் அவர்கள் மேற்கொண்டார்கள் ஞானச்சுடரின் அட்டைப்படத்தில் மங்களகரமாக விளக்குகள் இடம் பெற்றிருப்பதனைக் குறிப்பிட்டு, விளக்கினது பல்வேறு சிறப்புக்களை அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்கள். முக்கியமாக குத்துவிளக்கில் இருந்து வருகின்ற ஒளி எல்லாத்திசைகளுக்கும் பரப்பப்படுவதை எடுத்துக்கூறி பெண்கள் விளக்கை ஏற்றுவது மிகவும் சிறப்பானது எனவும் எடுத்து விளக்கினார்கள்.

ஆணவத்தை அழிக்க வேண்டும் என்பதற்காகவே சிவபெருமான் ஆணவத்தின் மொத்த உருவமான முயலகனை தனது பாதங்களால் மிதித்த வண்ணம் தாண்டவநடனம் ஆடுவதை எடுத்துக்கூறி எமது சமயத்தின் தத்துவங்களை நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் குறிப்பிட்டார்கள்.

பூசலார் மனதினால் கோயில் கட்டியதன் சிறப்பையும் அதனை இறைவன் எவ்வளவு மதித்து முக்கியத்துவம் கொடுத்தார் என்பதையும் உணர்ந்து நாமும் இறைவனை மனதினால் வணங்குவதனால் இறையருளைப்பெற முடியுமென்பதையும் குறிப்பிட்டார்கள்.

ஞானச்சுடரில் ஆரம்பம் முதல் இறுதி வரையுள்ள கட்டுரைகள் அனைத்தையும் உதாரணங்கள் மூலம் மதிப்பீடு செய்து தனது மதிப்புரையை நிறைவு செய்தார்கள்.

# சுடர் தரும் தகவல்

தொழில்ரீதியாக ஆசிரியர்களின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் வெளிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதே உலக ஆசிரியர் தினமாகும். உலக ஆசிரியர் தினம் சர்வதேசரீதியாக ஒக்டோபர் 6-ம் திகதி கொண்டாடப்படுகிறது.

தமிழர் பண்பாட்டைப் பொறுத்தவரை ஆசிரியர் - மாணவர் உறவு மிகவும் புனிதமான ஒன்றாகக் கருதப்பட்டு வந்ததை கடந்த சந்ததிவரை எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும் இன்று அந்த உறவில் ஒரு குழப்பமான நிலமை காணப்படுவதை யாரும் மறுப்பதற்கில்லை.

எமது மூதாதையர் காலத்தில் குருசிஷ்ய உறவாக இருந்தது பின்பு ஐரோப்பியர் காலத்திலும், தற்பொழுது உள்ள கல்விச்சூழலாலும் ஆசிரிய மாணவர் உறவாக அது மாறத் தொடங்கியது. குரு சிஷ்ய உறவில் இருந்த புனிதத்தின் காத்திரமான தன்மை ஆசிரியர் - மாணவர் உறவில் இருக்காவிட்டாலும் புனிதத்தன்மை என்பது இருந்து வந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்தப்புனிதத்தன்மையைக் காப்பாற்ற வேண்டியதே இன்றுள்ள முக்கியதேவையாக உள்ளது.

இன்று ஆசிரியர் - மாணவர் உறவில் காணப்படும் குழப்பமான நிலமைக்கும், ஆசிரியத்தொழிலின் புனிதத்தன்மை கேள்விக்குறியாகி இருப்பதற்கும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன இக்காரணங்கள் பலவற்றில் நியாயங்கள் இருப்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனாலும் ஒரு ஆசிரியர் தனது பாத்திரப் படைப்பை இந்தக் குழப்பங்கள், பிரச்சனைகள் மத்தியிலும் இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து ஒரு நல்ல ஆசிரியனாகச் செயற்பட வேண்டும் என்றே சமூகம் எதிர்பார்க்கின்றது.

யதார்த்த உலகில் உள்ள பிரச்சனைகள் அனைத்திற்கும் முகம் கொடுத்து நல்ல ஆசிரியனாகச் செயற்படுவதென்பது மிகவும் கடினமான காரியம், ஆனாலும் தொழில் தர்மம்கருதியும், ஒரு எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் பாரியபொறுப்பு தன்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்ற கருத்தையும் மனதிற்கொண்டு ஆசிரியர்கள் நல்ல ஆசிரியர்களாகச் செயற்படுவதே உசிதமானது.

மாணவர்களோ, பெற்றோர்களோ, சமுதாயமோ மதிக்காவிட்டாலும் அதற்குமேலாக, நாம் நம்புகின்ற இறைவனால் இரட்சிக்கப்படுவோம் என்ற உணர்வுடன் செயற்படுமாறு ஆசிரிய உள்ளங்களை ஞானச்சுடர் பணிவுடன் வேண்டுகின்றது.

உ

# புரட்டாதி மாத
# சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

N. ஜெயக்குமார்
( லண்டன் )

பவானி சற்குணச்செல்வன்
( நெதர்லாந்து )

திரு செ. இராசதிலகம்
( டயஸ்பிளேஸ், கொழும்பு )

Dr திருமதி பத்மராணி குகானந்தன்
( பல் வைத்திய நிபுணர், அச்சுவேலி )

திரு கந்தையா ஜெயபாலகணேசன்
( மின்சாரசபை, சிறுப்பிட்டி )

திரு சு. கனகசுந்தரம்
( சிறுப்பிட்டி தெற்கு )

திரு P. நித்தியானந்தம்
( சிறுப்பிட்டி தெற்கு )

திரு ந. முத்துக்குமாரசாமி
( சிறுப்பிட்டி தெற்கு )

உரிமையாளர்
( அருளானந்தா பிடவை விற்பனை நிலையம், சங்கானை )

உரிமையாளர்
( சிந்து வர்த்தக நிலையம், உரும்பராய் )

திரு வை. ச. பரஞ்சோதி
( சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில் )

திரு A. நாகரெத்தினம்
(கஜானன் அரைக்கும் ஆலை, இராச வீதி நீர்வேலி மேற்கு)

திரு அருளையா சுப்பிரமணியம்
(இராச வீதி, நீர்வேலி மேற்கு)

திரு கு. கதிரமலைநாதன்
(கிராம உத்தியோகத்தர், பத்தமேனி)

திரு சி. சி. கந்தையா (பலாலி)
(ஆவரங்கால்)

அதிபர்
(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

திரு பொ. குமாரசாமி
(சட்டத்தரணி, நவிண்டில்)

திரு ச. ஹரிகரன்
(ரகுராமன் தொலைத்தொடர்பு நிலையம் கரணவாய்)

திரு சி. சுப்பிரமணியம் D. L. O.
(சமரபாகு - உடுப்பிட்டி)

திரு தி. கருணாகரன் (கரன் எலக்ரோணிக்)
(கரணவாய் தெற்கு கரவெட்டி)

திரு வ. செல்வமோகன்
(மோகன்கடை ஆவரங்கால் மத்தி)

திரு வே. இராஜேந்திரா
(பொது சுகாதாரப் பரிசோதகர் ஆவரங்கால்)

து. சினிவாசகம்
(பொறளை - கொழும்பு)

மகேஸ்வரன் சங்கர்
(லண்டன்)

க. தர்மகுலசிங்கம்
(தேவன்இல்லம், உடுப்பிட்டி)

உ

# கலியுகவரதனாய்க் கண்கண்ட தெய்வம் முருகப்பெருமானே

நீர்வைமணி

கலியுகம் என்றாலே தீமைகள் மலிந்தயுகம். எங்கும், எதிலும், நெறி பிறழ்ந்து, உறுதி குலைந்து, உண்மை மறைந்து, நான் எனும் அகங்காரம், மமதை வளர்ந்து, பழமைகள், பண்பாட்டு நன்னெறிகள் யாவும் பழைசுகளுக்கே சரிவரும் என பண்டைய நன்னெறிகளையெல்லாம் ஒதுக்கித்தள்ளி மனம் போன போக்கிலே வாழ்க்கையைக் கழிக்க மக்கள் முன் நிற்கின்றார்கள்.



எனினும் அவ்வப்போது வரும்இடர்களின் போதெல்லாம் மக்களுடைய வாழ்க்கையிலே இறையுணர்ச்சி ஏற்படுவதையும், அந்த உணர்வுத் தூண்டுதலால் தத்தம் இடர்களைப் போக்க இறைவனை வேண்டுதல் செய்வதையும், அன்றாட வாழ்வில் நாம் அவதானிக்க முடிகின்றது. கலியுகத்திலே வாழ்வியலோடு இணைந்த ஒரு தெய்வ வழிபாடாக முருக வழிபாடு காணப்படுகின்றது.

படித்தோர் முதல் பாமர மக்கள் வரை அனைவருமே எதற்கெடுத்தாலும், முருகா! முருகா! என முணுமுணுப்பதை காணலாம். விளையாடப் போகும் போது வெற்றிக்காக முருகா! முருகா! என்போரும் வழக்கு வெல்லவும், போர் வெல்லவும், தத்தம் காரியங்கள் கைகூடவும், அவ்வப்போது ஏற்படும் எத்துன்பங்களும் நிவர்த்தியாகவும் முருகா! முருகா! என முருகனை வேண்டுதல் செய்வதை கேட்கவும், பார்க்கவும் முடிகின்றது.

"தனி வழிக்குத்துணை செங்கோடன் வடிவேலும் மயூரமுமே"

★ வாழ்க்கை என்பது அடித்தல் அல்லது அடிபடுதல். ★

என்று நம்முன்னோர்கள் எமக்கு வழிகாட்டி இருக்கின்றார்கள். நோயாலும், பேயாலும் வரும் எத்துன்பத்தாலும் எம்மைக்காப் பாற்றுபவன் கலியுகவரதனாகிய கந்தவேளே என்பதிற் தளராத நம்பிக்கை இன்றும் மக்கட்கு இருக்கின்றது.

கலியுகவரதனாகிய கந்தன் காப்பாற்றுவான் என்ற நம் பிக்கையால், இறை உணர்ச்சி யிற் கருத்தூன்றாதவனும், காவடி எடுத்து ஆடுகிறான். காவடி எடுத்து ஆடுபவரைக் கண்டாற் கண்ணீர் சிந்துகிறான் வேல்குத்திக் காவடி எடுப்பதாக நேர்த்தி செய்து தனது நீங்காத பிணியிலிருந்து சுகம் பெறுகின் றான் சந்நிதிக்கென்றும், நல் லூருக்கென்றும், கதிர்காமத்திற் கென்றும், பழனிக்கென்றும்யாத் திரைகள், செய்தும், நேர்த்திக் கடன்கள் செய்தும் தத்தம் அபி லாசைகளை நிறைவேற்றிக் கொள்பவர்களை அறியக்கூடிய தாகவுள்ளது.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் குமரகுருபர சுவாமிகள்,

'' வேண்டும் வரங்கொடுப்பான் மெய்கண்ட தெய்வம்
இத்தெய்வமல்லால் புவியில் வேறில்லை ''

எனக்கலியுகவரதனே, கண்கண்ட தெய்வம் முருகப்பெருமானே என்பதை அழகாக எடுத்துக்கூறியுள்ளார்.

முருகு. முருகன் என்றாலே அழகு, நல்ல பண்பு எனக்கூறு வார்கள். வாழ்க்கையில் நல்ல பண்புடன் கூடிய அழகைப் பெறும் ஆன்றோர்கள் முருக பக்தர்களாகப் போற்றப்படுகின் றார்கள். இந்த முருக பக்தர்கள் முருகனைப்பற்றி அழகாக இளமையில் முருகபக்தி நம்மன திற் பதிய வைப்பதற்காக,

'' சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை
சுப்பிரமணியருக்கு மிஞ்சிய தெய்வமில்லை '' எனவும்
'' சிந்தை நொந்தவனுக்குக் கந்தனே துணை '' எனவும்
'' கலிக்கும், கிலிக்கும் கந்தனையே எண்ணு '' எனவும்
'' கேளற்றவர்க்கு வேள் துணை '' எனவும் பலவாறு சிறப் புற எடுத்துக் கூறியுள்ளனர்.

மேலும் முருகபக்தர் அருண கிரிநாதரின் திருப்புகழும், அதன் பெருமையும் கலியுகவரதனாகிய முருகப்பெருமான் நம்பிக்கையும், உள்ளன்பும் கொண்டவர்க்கு எதிலும், எப்பொழுதும் வழித் துணையாகத் திகழ்கின்றது.

இதனையே திருப்புகழ்ப்பக் தர் ஒருவர் சிறப்பாகத் '' திருப் புகழ் படிக்குமவர் சிந்தை வலு வாலே ஒருத்தரை மதிப்பதில்லை உன்றன் அருளாலே '' என எடுத்துக்கூறியிருப்பது முருகவழி பாட்டிற்கு உள்ள தனித்துவ உணர்வை நன்கு வெளிப்படுத்து வதாயுள்ளது.

★ பெண்ணுக்குச் சீதனம் குணம்தான். ★

உ [தொடர்ச்சி...

# திருவருட்பயனின் வசனரூபம்

திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

## நான்காவது - திருவருளின் தன்மை பற்றிக்கூறும் அருளது நிலை

### திருவருளின் மகிமை

ஒருவருக்கு ஒரு பொருள் வேண்டப்படுங்காலத்து அவருக்கு அப்பொருளினும் மேலான பொருள் இல்லாத தன்மை போல திருவருளை அவாவிநிற்கும் அன்பர்க்குத் திருவருளினும் மேலானபொருள் உலகத்திலே இல்லை எனலாம்.

கதிரவன் ஒளியின்றி உலகம் ஒளி பெறாது. அது போலச் சிவபெருமானின் திருவருள் இன்றி, ஆன்மா ஒரு போதும் ஞானம் பெற முடியாது. வித்து முளைத்துப் பயன்தர வேண்டுமானால், நீரின் துணையும் வேண்டும். நீரின் குளிர்ச்சி பூமியையும் நெகிழச்செய்து, அதனைச் சார்ந்து கிடக்கும் வித்தையும் முளைக்கச்செய்து பயன் பெற உதவுகிறது. அது போல ஆன்மா பக்குவப்பட்டு நல்விளைவு பெறுவதற்குத் திருவருள் இன்றியமையாததாக இருக்கிறது.

உலகில் வாழும் மாந்தர்களுக்குச் சிற்சில வேளைகளில் சிற்சில பொருட்கள் மிகமிக இன்றியமையாததாகத் தோன்றும். கோடிக் கணக்கான பொன்னைக்கொண்டு பாலைவனம் வழியே போகும் ஒரு பிரயாணிக்குக் குடிக்க நீரின்றிப் பலநாள் வருந்த நேரிடின் தான் கொண்டு போன பொன்னிலும் பார்க்க நீரே பிரதான பொருளாகத் தோன்றும் தனது பொருள் முழுவதையுங் கொடுத்தேனும் நீர் வாங்கிப் பருக முயலுவான். அது போல உலகப்பற்றில் மூழ்கி அலையும் ஒருவன் என்றும் நிலையான பேரின்பத்தை அடைய உதவுந் திருவருளைப் பெற வேண்டுமாயின் தன்னுடைய பொருள்கள் யாவற்றையுஞ் சிறிதாக மதித்து முயற்சி செய்ய வேண்டும்.

### திருவருளின் பயன்

உலகின் கண்ணே உள்ள உயிர்கள் உணவு முதலியவற்றை ஈட்டவுந் துய்க்கவுங் காரணமாக விளங்குகின்ற சூரியனது ஒளியைப்

போல, ஆன்மாக்கள் வினைகளைச் செய்து புண்ணிய பாவங்களை வளர்க்கவும், அவற்றின் காரணமாகிய இன்ப துன்பங்களை அனுபவிக்கவுஞ் செய்கின்ற திருவருள், ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் ஆணவ மலத்தின் வலியை அடக்கி, ஆன்மாவின் ஞான சக்தியை விளக்கமுறச் செய்யும்.

## திருவருளால் ஆன்மா அறிவைப்பெறல்

சடப்பொருளாகிய உடம்பு ஒன்றையும் அறியாது. ஆணவப் பிடியால் கட்டுண்டு கிடக்கும் உயிர்கள் தானாக ஒன்றையும் அறியா. ஆன்மாவோ திருவருள் அறிந்து அறிவிக்க அறியுந் தன்மையுடையது.

இறைவன் உயிர்களில் அறிவிற்கறிவாகி நின்று உணர்த்துகிறான். அஃதன்றி உயிர்களினால் உணரப்படும் எப்பொருள்களிலும் நிறைந்து நின்று உயிர்கள் அப்பொருளை உணரும்படி செய்கிறான் இறைவனின் பண்புதான் திருவருள். உயிர் அறிவிக்க அறியுந்தன்மை உடையதாகும்.

## ஆன்மாக்கள் அருளை அறியாது மயங்கும்

திருப்பாற்கடலில் இருக்கின்ற மீன்கள் அப்பாலைப் பருகாது, இழிந்த சிறுபிராணிகளைத் தேடித்திரிகின்ற தன்மைபோலத் திருவருளில் தங்கியிருக்கின்ற ஆன்மாக்கள், தாம் தங்கியிருக்கின்ற திருவருளைத் துணையாகக் கொண்டு, பேரின்பத்தை அடையாமல் மயங்கி, உலகப் பற்றிலே அமிழ்ந்தி உழலுகின்றன. பாற்கடலிலுள்ள மீன்கள் பாலைக்கண்டும், அதைச்சிறந்த பொருள் என்று எண்ணாத தன்மை போல, ஆன்மாக்கள் திருவருளின் செய்கையைக் கண்டும், அதனை அடைந்து உய்யாமல் மயங்குகின்றன.

## திருவருள் அறிவிப்பதை ஆன்மா அறியாத நிலை

தான் போகவேண்டிய இடத்தைக் குறிக்கோளாகக்கொண்டு செல்லும் ஒரு வழிப்போக்கன், தனக்குப்பின்னால் தனக்குத்துணையாக வருகின்றவனுடன் கலந்து பேசிச் செல்லாத தன்மைபோல உலக இன்பங்களிலேயே மனதைச் செலுத்தி அவற்றைப் பெறுவதிலேயே பெருமுயற்சி செய்கின்ற உயிர்கள் தமக்கு என்றும் துணையாக உள்ள திருவருளை மறந்து விடுகின்றன.

மேலும் தமக்கு முதலாய் நின்று, தம்மைச் செலுத்துகின்ற உயிரை அறியாத ஐம்பொறிகள் போல உயிர்களும் தமக்குத்துணையாக நின்று தம்மைச்செலுத்துகின்ற திருவருளை அறியும் ஆற்றல் இல்லாதவனாய் நிற்கின்றன.

[ தொடரும்...

★ செல்வங்களைவிட செல்வாக்கு மேலானது ★

உ

# சிக்கனமாய் வாழ்வோம்

முருகவே இ. பரமநாதன்

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமது பதவி

பட்டுக்கோட்டையார்

**வா**ழ்க்கை வாழ்வதற்கே என்பாரும், வாழ்க்கை ஒரு கலை என்பாரும், வாழ்க்கை இயற்கை என்பாரும். வாழ்வின் இலக்கு இறைவனை அடைதல் என்பாரும் உளர். எப்படியோ வாழ்ந்து தொலைப்பது பிறவியின் அமைப்பு எல்லா உயிர் இனங்களும் வாழ்கின்றனதான். அவை மனித வாழ்வினின்றும் வித்தியாசமானது. மனிதவளர்ச்சியில் மனிதன் ஒரு வாழ்வமைப்பை, ஒருங்கமைப்பை அடிப்படையாக வைத்து வாழ்கிறான். உண்பது, உடுப்பது, இருப்பிடந்தேடுவது என்பனமுக்கியம். அது போல ஒழுக்கம், பழக்கவழக்கம், நடைமுறைகளும் நேரிய சீரியதாய் இருந்தாற்றான் வாழ்வு சிறப்புறும், செழிப்புறும், மற்றவர்கள் அவர்களை மதிப்பர், போற்றுவர். வாழ்பவரும் மகிழ்வர். நிறைவும் காண்பர். இப்படிச் சிந்திக்கும் போது பொருள் வளம், முக்கியமானது பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லைஎன்பது வள்ளுவர்வாக்கு பொருள் தனைப்போற்றி வாழ் என்றார் ஒளவையார். பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே என்பர். எனவே பொருள் ஈட்டுதலும், செலவழித்தலும், மிச்சம் பிடித்தலும், சேமித்தலும் மனிதர்க்கு முக்கியம். இல்லானை இல்லாளும் வேண்டாள். ஈன்றெடுத்ததாய் வேண்டாள், செல்லாது அவன்வாயிற் சொல். ஆகவே பொருள் செய்க என்றனர் அறிஞர்கள். பொருளாதாரம் ஒரு கற்கைநெறி. காசே தான் கடவுளடா - அது கடவுளுக்கும் தெரியுமடா என்று கண்ணதாசன் பாடினார். செல்வரை எல்லாரும் வரவேற்பர், மதிப்பர். உள்ளது சிதைப்போர் உளரெனப்படார். இல்லோர் வாழ்க்கை இரவிலும் இழிவு.

★ மனச்சான்றின் மகிழ்ச்சியே இன்பமாகும். ★

சிக்கெனத்தேடின் சேருமே செல்வம் என்பது மூதாட்டி வாக்கு. ஆனபடியால் பணம் தேடி, சிக்கனமாக வாழவேண்டும். அதில் ஒரு பகுதியை எதிர்காலத்துக்காகவும் சேமிக்க வேண்டும். இதை நாம் மேற்கொள்ள வேண்டும் இன்று ஆணும் பெண்ணும் உழைக்க வேண்டும். உழைப்பில் ஒறுப்பனவு வேண்டும். ஆடம்பரம் தாழ்வு தரும், எனவே ஊதாரிகளாய் வாழக்கூடாது என்பதை வள்ளுவனார், பொன்னெழுத்திலே பொறித்துள்ளார்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(வாழ்க்கைத்துணை நலம்)

கணவனுடைய வருமானத்துக்குத் தக்கபடி செலவு செய்யும் மாதுசிரோமணியே இல்லக்கிழத்தியாகும். எனவே வரவுக்கு ஏற்றசெலவு துணைவன், துணைவியர்க்கு இருக்க வேண்டிய கடமையாகும். ஒவ்வொருவரும் இதை மனதிற் கொள்ளல் இக்காலத்தின் கட்டாயம். அளவு அறிந்து அளித்து உண் என்றார் ஔவை.

இக்குறளின் பொருள்

மனைத்தக்க மாண்பு உடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை உடையவள், வாழ்க்கைத்துணை - அதற்குத் துணை,

நற்குணங்களாவன:-

துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார் மாட்டருளுடைமையும் முதலாயின, நற்செய்கைகளாவன - வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும் அட்டிற் தொழில்வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கை யாவது முதலையறிந்து, அதற்கியைய அழித்தல்

துறந்தோர் - சந்நியாசிகள், விருந்தயர்தல் - உற்றார் உறவினர் ஏழைகட்கு உணவு கொடுத்தல், அட்டில் தொழில் - சமையல், பொருள்கள் தேவைக்கமைய வேண்டல் நன்று (பொருள்கள் வீணாய்ப் போகாமல்) வீண் செலவு செய்யுதலைத் தவிர்ப்பது நன்று. ஆடம்பரம், இடாம்பீகம் கொண்டு வருந்தாழ்வு. எனவே குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வோடு செயற்படல் முக்கியம். கட்டுமட்டான வாழ்க்கையால் மனச் சஞ்சலம் இல்லை கடன்படாமல் வாழப்பழக வேண்டும். பட்ட கடனை நாணயமாய், நேர்மை

யாய் மீளக்கொடுக்கப் பழகல் மேலானது. அப்போதான் பிறர் மதிப்பர். இராமபாணம் செருக் களத்துற்ற போது கடன்பட் டார் நெஞ்சம் போலக் கலங்கி னான் இலங்கை வேந்தன் எனக் கம்பர் பாடினார். இந்த வரவு செலவு திட்டம் பற்றி வள்ளுவர் இன்னோர் குறள் தந்துள்ளார்.

ஆகாறளவு இட்டிதாயினுங் கேடில்லை
போகாற கலாக்கடை. குறள் 478

வருமானம் வரும் வழிசிறிய தானாலுங் காரியமில்லை செலவு செய்யும் பாதை பெரியதாய் அமையாமல் இருந்தால் இதையே ஒட்டைக்கை என்பர் இதன் தெளிவான பொருள் வருவாய்க் குத்தக்கபடி செலவு செய் என் பதாம். அதிகம் வருகிறது என ஆடம்பரமாகச் செலவு செய்ப வர் வருமானம் கம்மியானால் என் செய்வர். இதை மூதாட்டி "ஆனமுதலில் அதிகம் செலவா னால், மானம் அழிந்து மதிகெட் டுப் போனதிசை, எல்லார்க்கும் கள்வனாம் ஏழ்பிறப்பும் தீய னாய் நல்லார்க்கும் பொல்ல னாம் நாடு எனப்பாடியுள்ளார்.

பிறந்த நாட் கொண்டாட் டம், பூப்புனிதநாள் விழா, கல் யாணம், இடாம்பீகமாய்ச் செய்வது, பணம் படைத்தவர் களைப் பார்த்து நாமும் அவ் வழியிற் செல்லல் பொருந்தாது. ஆலயங்களிலே புகழுக்காகச் செய்வது தவிர்க்கப்பட வேண் டியது. எவர்சில்வர், விலையு யர்ந்த ஆடம்பர உடையால் நாம் உயர முடியாது. ஏட்டி போட்டி தேவையில்லை. மற்ற வர் போல் வாகனம் வேண்டு வது, லச்சறி வீடு வேண்டுவதும் இவ்வினத்தைச் சேர்ந்ததே - அத் தியாவசியத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். குடி, சூதாட்டம், புகைத்தல், ஹீரோ யின் பாவித்தல் உடல் நலத்தை யும் உளநலத்தையும் கெடுத்துக் கடன்காரர் ஆக்கி குடும்பத்தை யும் குட்டிச் சுவராக்கும்.

வீட்டிலே தேவையின்றி மின் சாரம் பாவித்தல் முனிசிப்பல் பைப்பைத்திறந்து விடல்-மாதக் கடைசியில் (Bill) சிட்டைவரும் போது தான் தெரியும். இதே போல நேரத்தை வீணாக்கக் கூடாது. காலம் பொன் என்பர். பொன்னான பொழுதை சிக்கன மாக்கி நல்லகாரியங்கட்குப்பயன் படுத்துவதும் ஒரு நேரச்சிக்கன மாம். பொழுது போக்காகப் படம் பார்த்தல், நாடகம்பார்த் தல் நல்ல பிரயோசனமாய் அமைய வேண்டும். பிள்ளை களைப் பிழையான வழியிலே இவை திருப்பாமல் நாம் கண் ணும் கருத்துமாய் இருப்பதும் இன்றியமையாதது.

★ வாழ்க்கைக்கு செயல்களே வலிமை அளிக்கின்றது. ★

மிச்சம்பிடிக்கும் பணத்தில் ஒருபாகத்தைச் சேமிப்பு வங்கியிற் போட்டுவைத்தால் எதிர் காலத்துக்குக்கை கொடுக்குமன்றோ வெறும் கைமுழம் போடாது. எம் உழைப்பு தர்ம கைங்கரியங்கட்கும் இளைத்தோர், அநாதைகள், அங்கக் குறைவானவர்க்கும் போய்ச் சேர்ந்தால் அது நம்மோடு கூட வரும். உணவைக் கொட்டுதல், சிந்துதல், வீசுதல், தவிர்க்கப்படல் நல்ல அறப்பண்பு. ஒன்று உணவை உதாசீனம் செய்கிறோம் அங்கேயும் பணம் குறுணியாகி நோட்டாயும் செலவழியும் ஆண்டவனும் தண்டிப்பான். அன்னதானத்தில் உணவு பரிமாறுவோர் அள்ளிவையாமல் அளவாயும், தேவைக்கமையவும் உணவைப் பரிமாறவேண்டும் உண்போரும் தேவைக்களவாக வேண்டி முழுதையும் மிச்சம் விடாமற் சாப்பிட்டு வெறும் இலையை வீசும் பொறுப்புணர்வாளராக அமைதல்மனிதப்பண்பாகும். கல்யாண வீடுகளிலே வீணாக வீசும் உணவு நூற்றுக்கணக்கான அநாதைக்குழந்தைகளின் பசியை நீக்கும் பலநிலையங்களில் தஞ்சம் புகுந்த (பராமரிப்பு நிலையங்களில்) குழந்தைகட்கு உதவமுன் வருவதும் ஒரு கைங்கரியமாம். பெற்றோர்க்கு நினைவுமலர்|அடிக்கும் பணத்தை இப்படியான அநாதை இல்லங்களில் தங்கிவாழும் குழந்தைகட்காக அன்பளிப்புச் செய்வதும் மேலான கைங்கரியமாகும் எனவே எம் பணம் தர்ம கைங்கரியங்கட்குப் பயன்பட வேண்டும். அது நாம் போகும் வழிக்கும் புண்ணியமாம் இதையே வள்ளுவனார் வறியவர்கட்கு கொடுப்பதே ஈகை (தர்மம்) பசியைத்தீர்ப்பதே தர்மம் என்கிறார்.

வறியார்க் கொன்றீவதே ஈகைமற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து. குறள் 221

வறியவர்க்குக் கொடுப்பதே கொடை மற்றெல்லாம் ஒரு பிரதி பலனை - கைம்மாறை எண்ணிச் செய்வது என்பது வள்ளுவனார் கருத்து.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி. குறள் 226

ஏழைகளின் பசியைத் தீர்ப்பதே பொருளுடையனின் சேமிப்பு வங்கி இதைஉணராமல் பசி இல்லாதவனுக்கு (வசதியுள்ளவருக்கு) அவித்துப்போடுவது தர்மமாகாது. ஆலயங்களும் சமுகப்பட்டறை நிலையங்களாய் மாறி மக்கள் தொண்டே மகாதேவன் தொண்டென்பதை மெய்ப்பிக்கவேண்டும்.

★ கிடைத்த பின் வருந்தக் கூடியவற்றை வேண்டாதே. ★

படமாடக் கோயிற் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காக
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயிற் பரமர்க்கங்காகும். திருமந்திரம்

நாட்டிலே பருக்கைக்கும், பாலுக்கும் பஞ்சப்படும் பச்சைப் பாலன்களைப் பாராமல் ஆண்டவனுக்கு அபிசேகம் செய்து யாது பயன்.

விடைவிடா துகந்த விண்ணவர்கோவே வினையனேனுடைய மெய்ப் பொருளே
முடைவிடாதடியேன் மூத்தற மண்ணாம் முழுப்புழுக்குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங்காத் தெனையாண்ட கருணைமாகடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே

எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனையும் சிக்கெனப் பிடிப் போமாக

சாட்டை-இல் பம்பரஜாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே!
தேட்டம் ஒன்று அற அருட்செயலில் நிற்றியேல்
வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே

பம்பரஜாலம் போல பம்பரமாயம் போல தாயுமானார் பாடல் தேட்டம் ஒன்று அற - கவலை ஏதும் இல்லாமல் உன்னி-நினைந்து

சுருக்கெழுத்தும் கைரேகையும் அவற்றை படித்தவனுக்குத் தான் தெரியும் மற்றவனுக்கு அவைகள் வெறும் கோடாகத் தான் தெரியும். அதுபோல் கோயிலில் இருக்கும் கடவுளின் திருவுருவம் பக்தி உடையவனுக்குத்தான் தெய்வமாகத் தெரியும், மற்றவருக்கு கல்லாகத்தான் தெரியும்

(வாரியார்) சுவாமிகள்

★ அறிவு! பெருகும் போது சந்தேகமும் பெருகுகின்றது. ★

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# அர்ச்சுனன் சபதம்

சிவத்திரு. வ. குமாரசாமிஐயர்

இந்திரனை நிகர்த்த ஒப்பற்ற வீரன் அபிமன்யு வீரசுவர்க்கம் அடைந்தவுடன் பாண்டவ சேனை போரிடுவதனை நிறுத்தி யுதிஷ்டிரர் இருக்குமிடத்தை அணுகியது. செய்தியறிந்த யுதிஷ்டிரர் கலங்கிப் புலம்பலாயினார். " அபிமன்யுவைப் பறிகொடுத்த நான் அர்ச்சுனனுக்கு எவ்வாறு ஆறுதல் சொல்வேன்? கண்ணபிரானுக்கும் சுபத்திரைக்கும் என்ன மறுமொழி கூறுவேன்? என்று பற்பலவாறு கூறித் துன்பப்பட்டார். அபிமன்யுவை இழந்து இனி என்ன நன்மையை அடையப்போகிறேன் என்று பற்பலவாறு புலம்பலானார். பாசறை எங்கும் ஒரே மௌனம். சோகம் கலந்த மௌனம் பெரும் பயங்கரத்தை ஊட்டியது. இந்நிலையில் வியாசமகரிஷி அங்கு பிரசன்னமானார். வியாசரை வரவேற்று வணங்கி விபரங்களை எடுத்துக்கூறி தமது கவலையை வெளியிட்ட யுதிஷ்டிரரை நோக்கி வியாசர் " மைந்தனே! விதியைக் கடக்க எவராலும் முடியாது. இறந்தவர்களைப்பற்றிக் கவலைப்படுவதனை விட்டு இருப்பவர்கள் நலத்தில்க் கருத்தைச் செலுத்து. துக்கப்படத் துக்கப்பட துக்கம் அதிகரிக்குமேயன்றிக் குறைவுபடாது. எனவே துன்பத்தைமறசெய்யும் காரியத்தில் கவனமாகச் செயல்ப்படு " என்று ஆறுதல் மொழிகளைப் பகர்ந்து விடை பெற்றார். வியாசர் வருகையால் சிறிதளவு மனத்தென்படைந்த யுதிஷ்டிரர் அர்ச்சுனன் வரும் வேளையை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

களத்தில் வேறொரு பகுதியிற் போரிட்டுக் கொண்டிருந்த அர்ச்சுனன் மாலையானதும் பாசறைக்குத் திரும்ப முயன்ற வேளையில் அபசகுனங்கள் ஏற்பட்டன. அப்பொழுது அர்ச்சுனன் கண்ணபிரானை நோக்கி " மாதவரே! என்மனம் பதறுகிறது. நாக்குத் தடுமாறுகிறது. உடல் சோர்வடைகிறது. இந்நிலையை உற்றுநோக்கும் போது

★ சத்தியத்தை வளைக்கலாம் முறிக்க முடியாது. ★

ஏதோ துயரச்சம்பவம் நடை பெற்றுள்ளது போல்த் தோன்று கிறது. தமையனார் நிலைமை எவ்வாறோ என்று நான் கவலைப் படுகிறேன்'' என்று கூறலானான். அர்ச்சுனனின் உரைகளைச் செவிமடுத்த கிருஷ்ணன் ஏதும் அறியாதவர் போன்று ''கவலைப்படாதே அர்ச்சுனா யுதிஷ்டிரருக்கு ஒருவித ஆபத்தும் ஏற்படவில்லை. ஏதாவது துயரமான சம்பவம் சிறியளவில் நடந்திருக்கலாம் அவ்வளவு தான்'' என்று அர்ச்சுனனுக்கு ஆறுதல் கூறலானார். அர்ச்சுனன் பாசறையை நெருங்கியதும் படை வீரர்கள் தலை குனிந்து மௌனமாக இருந்தனர். எங்கும்அமைதியும் மௌனமும் குடிகொண்டிருந்தது.

பாசறைக்குள் நுழைந்தனர் அர்ச்சுனனும் கண்ணபிரானும். அங்கு அபிமன்யுவைத் தவிர்ந்த அனைவரும் இருந்தனர் உள்ளம் பதட்டமடைந்த நிலையில் அபிமன்யு எங்கே? நான் யுத்த முனையிலிருந்து திரும்பும் வேளையில் எல்லாம் என்னை எதிர் கொண்டழைக்கும் அவன் இன்னும் இங்கு ஏன் வரவில்லை? என்று வினாவினான். நடந்து விட்டதுயரத்தை உணர்ந்து கொண்ட அர்ச்சுனன் ''அபிமன்யுவை நான் பார்க்காதுவிட்டால் என் உயிர் போவது உறுதி'' என்று புலம்பினான். அத்துடன் பத்மவியூகத்தை உடைத்து உட்புகுவதற்கு மட்டுமே நான் அவனுக்குக் கற்பித்திருந்தேன். வியூகத்தை விட்டு வெளியேறும் முறையை அவனுக்கு இன்னும் நான் கற்பிக்கவில்லையே. துரோணர் வகுத்த பத்மவியூகத்தை உடைக்கும்படி சிறுவனான அவனை ஏவினீர்களா? என்று உள்ளம் கதறக் கேட்டுக்கொண்டான். அர்ச்சுனன் படும் துயரைப் பொறுக்க முடியாத யுதிஷ்டிரர் நடந்த விபரங்களை எடுத்துரைத்து ஜெயத்ரதன் மூலம் தான் அபிமன்யு இறக்கும் நிலை ஏற்பட்டது என்பதனை எடுத்துரைத்தார். யுதிஷ்டிரர் உரைத்த மொழிகள் அவன் காதிற் புகுந்தவேளை மயக்கமடைந்தான் அர்ச்சுனன்.

சிறிது நேரத்தின் பின் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் கோபமடைந்தவனாய்க்கைகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்துப் பிசைந்தான். கண்களில் அனல் பறக்க ''நாளை என்புதல்வன் இறக்கக் காரணமாகவிருந்த ஜெயத்திரதனைக் கொல்வேன். துரோணர் முதலான பெரும் வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவனைக் காப்பாற்ற வரும் வேளையிலும் அவனைக் கொல்லாது விடேன்'' என்று பெரும் சபதம் ஒன்றை மொழிந்தான். பின்னர் ''நாளை மாலைக்குள் ஜெயத்ரதனைக் கொன்றொழிக்காது விடின் நான் உயிர் விடுவது திண்ணம்'' என்று

இன்று நாம் செய்யும் நன்மையே நாளைய இன்பம்.

மேலும் சூளுரைத்தான். இவ்வண்ணம் சபதம் செய்த பின்னர் காண்டீபத்தை தனது கைகளினாற் சுண்டினான். அர்ச்சுனனின் சபதத்தைக் கேட்ட கண்ணபிரான் தமது பாஞ்சஜன்னியம் எனும் சங்கை ஊதலானார் அவ்வேளை அர்ச்சுனன் தனது தேவதத்தம் எனும் சங்கை எடுத்து ஊதலானான். அவ்விரு சங்கங்களின் முழக்கப் பேரொலியால் உலகமேகிடுகிடுத்தது. அர்ச்சுனனின் சபதமும் கண்ணபிரானின் பாஞ்சஜன்னிய முழக்கமும் பாண்டவர்களை பெரும் மகிழ்ச்சி யடையவைத்தது.

பாண்டவர் பாசறையில் இருந்து முழங்கிய பேரொலிகளைச் செவிமடுத்த ஜெயத்ரதனும் கௌரவர்களும் கலக்கமடைந்தனர். அர்ச்சுனனின் சபதத்தையும் அறிந்து கொண்டனர் கௌரவர்கள். இதனாற் பெரிதும் கலக்கமடைந்தான் ஜெயத்ரதன். அவன் துரியோதனனாதியோரை அடைந்து தன்னைக் காப்பாற்றும் வண்ணம் கேட்டுப் புலம்பலானான். இதன் பின்னர் துரியோதனன் ஜெயத்ரதனையும் அழைத்துக் கொண்டு துரோணாச்சாரியாரை அணுகினான். துரோணரின் பாதங்களைப் பணிந்து வணங்கிய ஜெயத்ரதன் தன்னைக் காக்கும் வண்ணம் வேண்டலானான். அப்பொழுது துரோணர் வீரனே கலக்கமடையாதே. உன்னை நான் காப்பாற்றுவேன் அதற்குத் தகுந்த வகையில் நான் நாளைய தினம் வியூகங்களை வகுத்து உன்னைக் காப்பாற்றுவேன். நீ கவலையைவிட்டு தைரியமாகப் போர்செய்' என்று அவனுக்கு ஆறுதல் கூறலானார். இதனால் ஓரளவு பயமிழந்த ஜெயத்ரதன் மனத்திடத்துடன் போர் செய்ய உடன்பட்டான்.

கௌரவர் பாசறையில் நடந்த நிகழ்வுகளை ஒற்றர் மூலம் அறிந்து கொண்ட கண்ணபிரான் அர்ச்சுனனிடம் "நாளை கௌரவர்கள் முனைப்புடன் இருந்து ஜெயத்ரதனைக் காப்பாற்றுவார்கள். எனவே துரோணர் பெரும் வியூகத்தை வகுத்துப் போரிடச் சித்தமாகவுள்ளார். நாம் நன்கு சிந்தித்துப் போரிட வேண்டும்" என்று கூறலானார். இவ்வுரைகளைச் செவிமடுத்த அர்ச்சுனன் "கண்ணா! உமது பக்கத்துணையுடன் எனக்கு எவரையும் வெல்லும் ஆற்றல் உண்டு. யார் காவல் செய்த போதும் ஜெயத்ரதன் தலையைத் துண்டித்துப் பூமியில் நாளை வீழ்த்துவேன். இது நிச்சயம். நான் பிடித்திருப்பது காண்டீபம். எனக்குப் பக்கத்துணையாக இருப்பவர் கண்ணன். போர் புரிபவன் நான். இவற்றை எல்லாம் மிஞ்சும் ஆற்றல் ஒருவருக்கும் இல்லை. நான் எடுத்துள்ள சபதத்தை நிறை

வேற்றியே தீருவேன். இதற்குப் பக்கபலமாக உதவி செய்வது தங்கள் சித்தம். உங்கள் உதவி கிட்டும் வேளை இது எல்லாம் எனக்கு மிகச்சுலபமாக அமையும் நீங்கள் உதவுவதே மிகமுக்கியம்'' என்று கண்ணபிரானை வேண்டி தனது சபதத்தை நிறைவேற்ற முடிவுசெய்தான்.

இதன் பின்னர் கண்ணபிரான் துயருற்று இருக்கும் தனது சோதரியைக் கண்டு அவளுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறி அவளைத் தேற்றலானார் பாண்டவர்களும் கலக்கமடைந்தனர். அர்ச்சுனன் உயிர் துறக்கப் போவதாகக்கூறிய சபதம் அவர்களைக் கவலை அடையச் செய்தது அர்ச்சுனனுக்கு உதவ வேண்டும் என்றநினைப்பினால்க் கண்ணபிரான் சிந்தனைவயப்பட்டிருந்தார். முடிவில் தனது தேர்ச்சாரதியை அழைத்துஎனது தேரையும் அதனுள் ஆயுதங்களையும் எடுத்து வைத்துச் சித்தம் செய்யும் வண்ணம் பணித்தார். இவ்வாறு இரவு கழிந்தது.

காலை உதயமாயிற்று கண்ணபிரான் பாண்டவர்களைச் சந்தித்தார் கலக்கமடைந்த பாண்டவர்கள் கண்ணனைச் சந்தித்ததும் மகிழ்வடைந்தனர். அப்பொழுது யுதிஷ்டிரர் ''கண்ணா! இந்திரனின் உதவியாற் தேவர்கள் வாழ்வது போன்று தங்கள் உதவியால் நாம் வாழ்கிறோம். அர்ச்சுனன் எடுத்த சபதத்தை நிறைவேற்றத் தாங்கள் அருள் புரியவேண்டும்.'' என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்ட கண்ணபிரான் ''மன்னா அர்ச்சுனனைப் போன்ற வீரன் வேறொருவரில்லை. இன்று ஜெயத்ரதன் அழிவது நிச்சயம் நீர்கவலைப்பட வேண்டாம்'' என்று அவனுக்கு ஆறுதல் கூறலானார். இதனால்ப் பாண்டவர்கள் மகிழ்வடைந்தனர். பின்னர் போர் முனைக்கு அனைவரும் செல்லச் சித்தமாயினர்.

தொடரும்...

மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை, பள்ளமான இடத்துக்கு ஓடி வந்து விடுகிறது. அதுபோல் இறையருள், தற்பெருமையும், கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை; பணிவுள்ளவர்களின் உள்ளத்தில்தான் தங்கி நிற்கும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

வாழ்க்கை என்பது சந்திரன் மாதிரி, சில சமயம் இருட்டு, சில சமயம் முழுநிலவு.

★ சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும். ★

# யார் இந்த(ச்) செல்லம்மா?

சச்சிதானந்த ஆசிரமம்

இந்து சமுத்திரம் ஈன்றெடுத்த முத்து இலங்கைத்தீவு இதற்கு சிகரமாகத் திகழ்வது யாழ்ப்பாணம். யாழ்பாடி புகழ் தேடிய இவ்விடத்திலிருந்து தெற்கே 10 கிலோமீற்றர் தொலைவில் அழகான தீபகற்பம் போன்ற ஒரு சிறுகிராமம். மூன்று பக்கமும் கடலால்ச் சூழப்பட்டு பாலத்தால் இணைக்கப்பட்டு பச்சைப் பசேலென காலத்தால் மாறாது கண்ணைக் கவர்ந்து இழுத்த வண்ணம் இருக்கும் அந்தக் கிராமம் தான் கைதடி. கிராமத்தின் நுழைவாயிலில் சைவச் சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், யாழ்பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை, ஆயுள் வேதபோதனா வைத்தியசாலை போன்றவை அமைந்துள்ளன. கிழக்குப்புறமாக வரலாற்றுப் பெருமைகொண்ட பிள்ளையார் கோவிலும், மேற்குப்புறமாக இணுங்கித்தோட்ட முருகன் ஆலயமும், வடக்குப்புறமாக கயிற்றசிட்டி கந்தன் ஆலயமும் இருந்தவாறு இக்கிராமத்தை காத்த வண்ணம் திகழ்கின்றன. இவற்றின் மத்தியில் அமைந்தது தான் ஸ்ரீசச்சிதானந்த ஆசிரமம் அன்று குனிந்து செல்லக் கூடிய தவக்குடிசையாக இருந்தது. அந்த ஆனந்த நகரில் இன்று நிமிர்ந்த கம்பீரதோற்றத்துடன் காலத்தால் அழியாத கருங்கல்லில் பொழிந்த கோவிலாக தியான மண்டபம் காணப்படுகிறது.

பூஞ்சோலைகளும், மாஞ்சோலைகளும், பூத்துக்காய்த்து பொலிவுதர, பக்தி ஞானப் பரவசமூட்டும் பஜனைகள், பிரார்த்தனைகள், தினமும் எங்குமில்லாதவாறு நடந்து அடியவர்களைத் தன்பால் கவரும் நிலமாக மாறிவருவது கண்கூடு. தவக்குடிசை தலமாக மாறிய வரலாறு பின்னர் பார்க்கப்படும். இங்கு உறையும் தெய்வத்தின் வரலாறு இப்போ பார்ப்போம்.

"ஒருமையுடன் நின்று திருவடிகள் நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்று பாடி இராமலிங்க வள்ளலின் பாட்டை மீட்டுப்பார்த்தபோது இவ்வரிக்கும் இவ்வாச்சிரமத்திற்கும் இடையே ஒரு தொடர்பு

★ ஆசை முடியும் கட்டத்தில்தான் அமைதி பிறக்கிறது. ★

இருப்பதையும். பக்தி மார்க்கத்தில் பசிப்பிணிக்காக புரட்சி செய்த சுவாமி இராமலிங்க வள்ளலாரின் ஞானதிருஷ்டி ஆனந்த பூமிக்கும் கிட்டியுள்ளது போன்ற சிந்தனையையும் தூண்டுகிறது. ஏன் தமிழகத்தில் ஒரு தவப்புதல்வன் இராமலிங்கவள்ளல் கைதடி வடக்கில் அவர் பாடல்களை உச்சரித்து பாடீர் அவர் நாமம் வீடே பெறலாமே'' என்றவாறு ஒரு இராமலிங்கம் கனகசபை என்று ஒரு அடியார். இவர் இங்கே கனகசபையினுள் இறைவனுடைய திருநடனத்தைக் காண்கின்ற இராமலிங்கமாகத் திகழ்ந்தார். இராமலிங்கம் கனகசபை அவர்களுக்கு ஒரு வாழ்க்கைத்துணையைத்தேடி அவர்களது பெற்றோர்கள் அக்கிராமத்திலுள்ள சடைப்பிள்ளை அம்மையரைத் திருமணம்செய்து வைத்தனர். ''இல்வாழ்வாள் என்பாள் இயல்புடை மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை'' என்ற குறள்பாடி வாழ்ந்து வருங்கால் இறையருள் நன்மக்கட் பேறுகளாக இராமலிங்கம் தங்கம்மா வேலாயுதபிள்ளை, செல்லம்மா, தெய்வானைப்பிள்ளை, முத்துலிங்கம், சரஸ்வதி என்போரை கனகசபை சடைப்பிள்ளை தம்பதியினர் பெற்றெடுத்தனர். பிற்காலத்தில் ஆனந்த நகரைத்தந்த செல்லம்மா அவதரித்தார். 1917 - 07 - 28 வேண்டுவதை வேண்டியோர்க்கு ஈர்ந்த ஈசனின் அருளால் திழைத்திருந்த குடும்பத்தினர்க்குப் பிற்காலத்தில் ஒரு ஆன்மிகவிருட்சமாக வர இருந்த நான்காவது குழந்தை செல்லம்மாவின் நிலைபற்றி அப்போது அறிந்திருக்கவில்லை பெற்றோர் செல்லமாக வளர்த்த செல்லம்மாவை கல்விகேள்விகளில் சிறந்த பிள்ளையாக வளர வேண்டுமெனவும், அவயத்தில் முந்தியிருக்கவேண்டும் எனவும் ஆசைப்பட்டு கல்வி கற்பிக்க ஆரம்பித்தார். ஆன்மீக ஞானத்தால் மழலையிலே நிரம்பியிருந்த குழந்தைக்கு பாடசாலைக் கல்வி பாகற்காயானது. பக்திப் பாடல்கள் பாடுவது. மண்ணிலே இறைவிக்கிரகங்களைச் செய்து வீட்டிலே தனியறை அமைத்து தியானிப்பதிலும் அவளது பொழுது போனது. அத்துடன் தந்தையார் பாடுகின்ற இராமலிங்க வள்ளலாரின் பாடல்களை மனனம் செய்து தினசரி பாடித் தியானிப்பதும், அம்மையைப் போல் உடுப்பு உடுத்தி அலங்கரிப்பதும் அவளது பெற்றோரை வியப்புக்குள்ளாக்கியது. லௌகீக உலகில் வாழ்ந்து கொண்டிருந்த பெற்றோர் வளர்ந்து வாலைப்பருவம் எய்திய நிலையில் ஒரு மணாளனைத் தேடி திருமணம் செய்து வைத்தால் சாதாரண உலகியலுக்குள் திருப்பிவிடலாம் என்று உற்றார் அயலவருடன்கூடி ஒரு திருமணம் செய்யவிழைத்தனர். சாஸ்திர விற்பன்னர்கள் ஓலைப் பொருத்

★ அன்புக்காகவே அன்பு செலுத்த வேண்டும். ★

தம் பார்த்தனர். 1934ம் ஆண்டில் வரலாற்றுத் தொன்மையும் அண்டசராசரம் அனைத்தையும் பூத்த வண்ணம் காத்தருளுகின்ற யாழ்ப்பாணம் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய முகாமையாளர் செல்லத்துரையின் பொருத்தம் பார்க்கப்பட்டு திருமணத்தை பெற்றோர் செய்துவைத்தனர். புகுந்தவீடு செல்லம்மாவிற்கு உலகியலின்படி ஒரு தேன்நிலவு மாடமாக அமையவில்லை. அவரது ஆன்மீக வாழ்வில் ஆனந்த வீடாக அமைந்தது அப்போது செல்லம்மாவின் வயது 17.

அம்மையாரது 17வது பராயத்தில் திருமணம் நிகழ்ந்தது. மட்டுவிலில் கணவருடன் கணவரின் தாயாரும் இருந்தார். கோயிலின் உடைமைகளாகிய வயல், நிலங்கள். நூற்றுக்கணக்கான பசுக்கள் இன்னோரன்ன யாவும் முகாமையாளரின் பொறுப்பிலேயே இருந்தன. பல தொழிலாளர்கள் இவற்றைப் பராமரிக்கும் பொறுப்பில் இருந்து வந்தனர். செல்லம்மாவின் மாமியார் செல்லம்மாவை வீட்டு வேலைகளிலும் ஆலய வேலைகளிலும் தேர்ச்சி பெறும் வகையில் பலவற்றைக் கற்றுக்கொடுத்தார். விடிகாலையில் மாடுகளில் பால் கறந்து ஆலயத்திற்கு எடுத்துச் செல்வதும் ஆலயச் சூழலைக் கூட்டிப் பெருக்குவதும் முக்கிய பணிகளாகும். செல்லம்மாவிற்கு இப்பணிகள் மிகவும் பிடித்துப்போயின. எல்லாவற்றிற்கும் மேலாக கோயில் முதலாளியின் மனைவி என்பதிலும், பல ஏவலாட்கள் தனக்கு உண்டு என்பதிலும். எல்லையற்ற சொத்துக்களின் நிர்வாகி என்பதிலும் அவரையறியாமலே அவரிற்குள் கர்வமும் பெருமையும் வளர்ந்து வந்தன

அக்காலத்தில் இவரது சிறு சிறு விருப்பங்களையெல்லாம் அம்பாள் நிறைவேற்றி வந்தாள். தாம் எது கேட்பினும் அம்பாள் நிறைவேற்றுவாள் என்னும் உறுதியான நம்பிக்கை அவருள் வளர்ந்து வந்தது அக்காலத்தில் அவரது விருப்பங்களெல்லாம் சேலைகளிலும் நகைகளிலுமே இருந்தது. இவ்வாறு தம்மை அலங்கரித்து அழகு பார்த்தசெல்லம்மாவிற்கு எல்லாம் வல்ல அம்பாளையும் அலங்கரித்து அழகு பார்க்கும் விருப்பம் எழுந்தது அம்பாளிற்கு பலவிதமான அலங்காரங்களைத் தமது விருப்பப்படி செய்து அழகுபார்க்கத்தொடங்கினார். அம்பாளிற்கு முதல்நாள் கட்டிய சேலையை மறுதினம் அன்பர்களின் விருப்பப்படி தாம் கட்டிகொண்டு ஆலயம் வருவார். விசேடமாக தாம் அதிகம் விரும்பும் நீலமான கரைப்பட்டு சேலையை அம்பாளிற்கு கட்டுவித்து நகைகளும் போட்டு அம்பாளின் உச்சியில் கொன்றைப் பூவை இலையுடன் சூடி தூர நின்று அம்பிகையின் அழகைப் பார்த்துப் பார்த்துப் பூரித்து விடுவார். ( தொடரும்...

★ உலக ஆசை நீங்குமளவு ஈசுவர பக்தி அதிகரிக்கும் ★


யாமிருக்க பயம் ஏன்

உ

# தாய்நாட்டிலும், சேய்நாட்டிலும், பிறநாட்டிலும் ஸ்கந்தன்

செல்வி ச. தனபாக்கியம் B. A. (Hons)

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது நமது மதத்தின் அடிப்படைச் சிந்தாந்தமாகும். ஆயினும், மனிதன் தன் இயல்பிற்கேற்க, இந்த ஒப்பற்ற தனித் தெய்வத்திற்குப் பல உருவங்களைக் கொடுத்து வழிபடுகின்றான். இம்மரபு நம் மதத்தில் ஒன்றிக் கலந்துவிட்டதொன்றாகும். ஸ்கந்தன் உருவ வழிபாடு அதிலொன்று. மேற்குறிப்பிட்ட தலைப்பினடிப்படையில் இவ்வழிபாட்டைப் பின்னோக்கி ஆராய எடுத்துக் கொண்ட முயற்சியே இக்கட்டுரையாகும்.

தெய்வத்திடம் பக்தர்களுக்கு அருள்புரியும் அருட்கனிவு இருக்க வேண்டும். பக்தனுக்குத் தெய்வத்திடம் பாவனையுடன் கூடிய பக்தி இருக்க வேண்டும். இந்த இரண்டும் கூடியதாக ஒரு தெய்வ வழிபாடு இருப்பின் அது மக்கள் மத்தியில் பிரபல்யமடைவது இயல்பாகும். இந்த வகையில் பக்தர்களிடத்து அருள்புரிவதற்கு உளம் கொண்டவனான ஸ்கந்தன் தன்னைப் பக்தர்கள் இதயத்தில் நன்கு ஆழமாகப் பதித்துக் கொண்டான்.

இவ்வகையில் தாய் நாட்டிலும், சேய் நாட்டிலும், பிற நாட்டிலும் பரவிக் காணப்படும் ஸ்கந்த வழிபாடு மிகப் பழைய காலத்திலிருந்தே மக்களால் வழிபட்டு வந்ததொன்றாகும், சங்க நூலான புறநானூற்றில் இவன் பற்றிய குறிப்பைக் காணமுடிகின்றது. இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சேயோன் என்ற மலையுறைத் தெய்வமாகக் குறிப்பிடப்படுகின்றான். திருமுருகாற்றுப்படை என்ற சங்க நூல் இவன் பெருமையை யுணர்த்த எழுந்த நூலாகும். சமஸ்கிருத நூலான ஸ்காந்த புராணம் இவன் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுந்த புராணமாகும். இதிகாசங்களில் இவன் வழிபாடு பிரபல்யமுடையதொன்றாகக் காணப்படுகிறது. இவன் பெயர்கள் மகாபாரதத்தில் வனபர்வத்தில் முப்பத்திரண்டாம் அதிகாரத்தில் தருமரின் வேண்டுகோளுக்கிணங்கத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பதஞ்சலி

தமது காலத்தில் சிவன், ஸ்கந்தன், விசாக என்ற தெய்வங்களின் வணக்கம் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். குஷாண மன்னனான கனிஷ்க மன்னன் காலத்து நாணயத்தில் கிரேக்க எழுத்தில் 'ஸ்கந்தோ', 'மகாசேனோ' 'கொமாரோ', விசாகோ, என்ற பெயர்களையுடைய தெய்வங்களின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. கி. பி. 414 - இல் பில்சாத் என்ற இடத்தில் துருவ சர்மனால் மகாசேனனின் ஆலயத்திற்கு அரங்கொன்று கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. ஹேமாத்திரியின் 'விரதகண்ட' என்ற நூலில் கார்த்திகேயன் என்ற தெய்வத்திற்குரிய புனித கிரியைகள், விரதங்கள் என்பன பல குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு மிகப் பழைய காலத்திலிருந்தே தமிழ் இலக்கியங்களிலும் சமஸ்கிருத இலக்கியங்களிலும் அதிகமாகப் போற்றப்பட்டுள்ள இவன் ஆரியத் தெய்வமா அல்லது ஆரியரல்லாத் தெய்வமா என்று உறுதிப்படுத்திக் கூறுதல் கஷ்டமாகும். ஆனால், வட இந்தியாவில் தோற்றம் பெற்ற முருக வணக்கம் இப்பொழுது வட இந்தியாவில் பிரபலமுற்றுக் காணப்படவில்லை. டபிள்யு. வார்ட் என்பவர் பெங்களூரில் கார்த்திகேயனுக்கு அதிக தேவாலயங்கள் எழுப்பப்படவில்லையென்றும் இந்துக்களின் இல்லங்களில் விழாக் காலங்கள் தவிர்ந்த மற்றக் காலங்களில் முருகனின் திருவுருவங்கள் வைத்து வணங்குதல் காணப்படாமையைத் தாம் அவதானித்ததாகக் கூறுகின்றார் ஆனால், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இவன் வழிபாடு பிரபல்யம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் இவன் வழிபாடு மிகத் தொன்மையான காலத்திலிருந்து காணப்படுகின்றது. கதிர்காம ஆலயம் எக்காலத்து எழுப்பப்பட்டது என்பது இதுவரை எவரும் அறிந்திலர். இலங்கையின் வரலாற்று நூலான ''ராஜவலி'' குவேனி விஜயனை இரகசியமாகக் கொல்ல விரும்பியபொழுது கந்த குமரன் அவனைக் காப்பாற்றியதாகக் கூறுகின்றது. துட்டகைமுனு நாட்டைத் தமிழரிடமிருந்து விடுவிப்பதற்காக ஸ்கந்தனை வணங்கினான் என ஒரு வரலாறு காணப்படுகின்றது. அவன் எல்லாளனை வென்றபின் கதிர்காமத்திற்குச் சென்று ஸ்கந்தனை வழிபட்டுத் தன் வெற்றியைக் கொண்டாடினான் என்று கந்த உபத என்ற சிங்களக்கவிதை குறிப்பிடுகின்றது. மேலே குறிப்பிட்ட மரபுக்கதையும், கவிதையும் துட்டகைமுனுவின் காலத்திற்கு முன்பே கதிர்காமத்தில் ஸ்கந்த வழிபாடு இருந்தமையைச் சுட்டுகின்றன.

★ ஒழுங்காக வாழ்பவன் சிறந்த போதகன். ★

போர்த்துக்கீசர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் ஜி. எப். டி. கெர்பே என்பவர் தலைமையில் கதிர்காம ஆலயத்தைக் கொள்ளையிட முனைந்தனர். ஆனால் அவர்கள் அப்பகுதியை அடைந்து அவ்வாலயத்தின் இருப்பிடத்தை அறியாது அங்குள்ள சுதேசிகளைக் கைது செய்து, ஆலயத்தின் இடத்தைத் தெரிவிக்கும் படி கேட்டனர். சுதேசிகள் தமக்கு முன்னரே தெரிந்த அவ்வாலயத்தைக் காட்டுவதற்கு முனைந்தும் முடியாது போய் விட்டது. இச் சம்பவம் கதிர்காமத்தில் உறையும் ஸ்கந்தனின் அற்புதத் திருவிளையாடலையே தெளிவுறுத்துகின்றது.

பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த றொபேர்ட் நொக்ஸ், (Cotteragam) கொத்ரேகம் என்ற தெய்வத்திற்கு மக்கள் உப்பை அர்ப்பணித்து வழிபட்டனர் எனத் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார் ஜே. டேவி (1861) என்பவர், தெய்வங்கள் எல்லாவற்றுள்ளும் "கதரகம" தெய்வம் மிகப்பயங்கரமானவன் என்றும், ஆனால் அவரால் அவன் உருவைச் சுதேசிகளைக் கொண்டு வரைந்தெடுக்க முடியாமலிருந்ததெனவும் குறிப்பிடுகின்றார் இவருடைய கருத்துக்குப் பதில் அளிப்பவர் போல் சேர். பி. அருணாசலம் கதிர்காமத்தில் ஸ்கந்தன் திருவுருவம் வைத்து வணங்கப்படுவதில்லை எனவும், அங்கு அவன் பக்தர்களின் காட்சிக் குத்திரை நீக்கம் செய்யப்படுவதில்லையெனவும் குறிப்பிடுகின்றார். மேலும் தெய்வ சக்தியும் அருளும் வாய்ந்த யந்திரம் ஒன்று செப்பொன்றினும் இருப்பதாகத் தெரிகின்றது இச்செப்பு பெருவிழாக் காலங்களிலேயே யானை மீது பவனியாக எடுத்துச் செல்லப்படுகின்றது.

கதிர்காமத்தில் இப்பொழுது காணப்படுகின்ற ஆலய மண்டபங்களுள் முக்கிய மண்டபம் ராஜசிங்கன் I (1581 — 1593) ஆல் கட்டப்பட்டதாகும் மிகப் பழைய காலத்திலிருந்தே சிங்கள மன்னர்களும் மக்களும் கதிர்காமனிடம் பக்தியுடையவர்களாகக் காணப்படுகின்றனர். பௌத்தர்கள் பழைய காலத்திலிருந்தே இந்துக்கோவில்களுக்குச் செல்வதற்குத் தயக்கமுறவில்லை. அவர்கள் பௌத்த ஆலயங்களில் பிரம்மா, விஷ்ணு, கார்த்திகேயன் ஆகிய தெய்வங்களைச் செதுக்கி வழிபடும் தன்மையை இன்றும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

கதிர்காம வழிபாட்டை ஒத்த முறையில் மண்டூரிலும், மட்டக்களப்புக்குத் தெற்கேயுள்ள பழைய உருஹீண மாகாணத்திலுள்ள திருக்கோயிலிலும் முருகன் திரையிடப்பட்டுப் பக்தர் காட்சிக்கு அரிதானவ

★ குருடனுக்கு குருடன் வழிகாட்ட முடியுமா? ★

னாகக் காணப்படுகின்றான். ஆனால் இலங்கையிலுள்ள மற்ற முருகன் தேவாலயங்களில் முருகன் திருவுருவம் பக்தர் காட்சிக் கெளிதாகத் திரை நீக்கஞ் செய்யப்படுகின்றது. இந்த வேறு பட்டவழிபாட்டுமுறை இலங்கையில் ஸ்கந்த வழிபாடு கலப்புடைய தொன்றென்பதையே உணர்த்துகிறது. சேர். பி. அருணாசலம் வேடரின் கந்தேயக கதிர்காமக் கந்தசாமி இருவரும் ஒருமைப் பண்புடையவர்களெனக் கருதுகின்றார்.

இலங்கையில் பிரசித்தமான முருகன் ஆலயங்களுள் ''வெருகல் சித்திர வேலாயுத சுவாமி'', ''நல்லூர்க்கந்தசுவாமி'' ''குமரபுரம்'', ''மாவிட்டபுரம் கந்தசுவாமி'' முதலான ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். ஆனால், தமிழ் மக்கள் வதியும் கிராமந்தோறும் முருகன் ஆலயங்களையும் முருக பக்தர்களையும் நாம் கண்டு முருக பரவசமடைகின்றோம்

போர்த் தெய்வமாகக்கருதப்படும் இவன் பெருமை யப்பான் வரை சென்றுள்ளதை நாம் கவனிக்கலாம் ஸ்கந்தன் யப்பானியரின் போர்த் தெய்வமாகக்கருதப்படுகின்றான் அதாவது இந்து மதம் புத்த மதத்தினூடாக யப்பான் வரை சென்றுள்ளது. எனவே, இவ்வளவு தூரத்திற்கு இவன் வணக்கம் சென்றமை பற்றி நாம் ஆச்சரியப்பட இடமில்லை பெரும் ஆராய்ச்சியாளர்களே இந்துத்தெய்வ வரலாறுகளும், தெய்வங்களும் யப்பான், சீனா, கொரியா, கம்போடியா, பர்மா போன்ற இடங்களில் மாறுபாட்டுடனும், மாறுபாடில்லாமலும் வணங்கப்பட்டு வருவதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்

''ஆடிவா முருகா பாடிவா முருகா'' எனப்பக்தர்கள் பரவசப்பட்டுக் குரல் எழுப்ப அவன் தாய் நாட்டிலும் சேய் நாட்டிலும் மட்டுமன்றி பிற நாட்டிலும் அருட்கனிவைக் காட்டுகின்றான். இது அவனுக்குரிய தனிப் பெருமையாகும்.

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றஇக் காட்டினோமே.

---

அறிவிற்கும், மகிழ்ச்சிக்கும் உள்ள வேறுபாடு இதுவே - நானே உலகில் மிகவும் மகிழ்ச்சியானவன் என்று நினைப்பவன், உண்மையில் மகிழ்ச்சியானவனே. நானே உலகில் மிகவும் அறிவுள்ளவன் என்பவன் தான் உலகிலேயே பெரிய முட்டாள். இவர்களில் நாம் யார்?

★ நன்னடத்தை உடையவனையே இன்பம் பின்தொடர்கிறது ★

உ

# அரை நிமிட நேரம்

சி. யோகேஸ்வரி

எமது மனம் எப்படிப்பட்டது? மிகவும் மென்மையானது எனத்தான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அனிச்ச மலர் போன்று ஒரு சுடுசொல் செவியில் கேட்டதுமே வேதனையிலே துவண்டு விடுகிறதே என்று எமது மனதைப்பற்றி நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம்

ஆனால் சிறிது சிந்தித்துப் பார்த்தால் எமது மனம் கல் என்று தோன்றும். கல்லென்று சாதாரணமாகக் கூறிவிட முடியாது. கருங்கற்பாறையென்று கூடக் கூறமுடியாதளவு அதை விடவும் கடினமான ஒன்றாகத் தானிருக்க வேண்டும்.

இந்த மனந்தானே எத்தனையோ பேருக்கு எவ்வளவோ தீங்குகளைத் திட்டந்திட்டிச் செய்விக்கின்றது. அவர்கள் வேதனைப்படும் போது சற்றும் இரங்காதது மட்டுமல்ல, அந்த வேதனையைக்கண்டு மகிழவுஞ் செய்கிறது.

மற்றவர் சீரும் சிறப்புமாக, பெயரும் புகழுமாக இருந்தால் அதைக்கண்டுபொறாமைப்பட்டு அவர்களது உயர்வை ஒழித்து விட எப்படியெல்லாம் திட்டம் வகுத்து செயற்பட வைக்கிறது.

வகை வகையான எத்தனை தீய குணங்களின் கூட்டுக்கலவையாக எமது மனம் இறுகி வலிமையான பாறாங்கல்லாக இருக்கிறது இந்த மனதை மென்மையானது என்று எப்படிச் சொல்வது?

இந்தக் கல்மனதில் என்ன விளையும்? கல்லிலே விதை விதைத்தால் முளைக்குமா? இந்த மனதிலும் நல்லது எதுவும் முளை விடாது. ஆனால் அந்தக் கல்மனதிலே தாமரை மலர வேண்டுமென்று எனக்கோர் ஆசை.

" இதென்ன பைத்தியக் காரத்தனம்? தண்ணீரிலல்லவா தாமரை மலரும்! அப்படிப்பட்ட தாமரைகல்லிலே மலர்வதாவது' என்று எனது ஆசையைக் கேட்டுச் சிரிப்பீர்கள்.

நீங்கள் சிரிக்கலாம். ஆனால் நான் ஆசைப்படுவது உண்மை. அதுவும் மிகவும் அழகான அரவிந்தம் மலர வேண்டும். மலருமா?

★ உள்ளத்தின் உட்சாரப்பே கவலையும், களிப்பும் ★

'' திணியான மனோநிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ?'' (கந்தர் அநுபூதி)

கல்லைக் கனிய வைத்தால் அரவிந்தம் அங்கு மலரலாம். எப்படிக்கனிய வைப்பது? அதனை திண்மையானதாக்கிய அழுக்குகள் அத்தனையையும் அகற்றினால் உள்ளக் கமலம் வெள்ளைக் கமலமாகுமே.

அது நடைபெறக்கூடியதா? தீயகுணங்களை மிகவும் சுலப மாக விட்டுவிட முடியுமானால் இந்த உலகம் இப்படியிருக்காதே ஒவ்வொருவரையும் இலகுவில் நல்லவராக்கி இந்தப் பூவுலகை ஆனந்தமயமாக்கி விடலாமே.

அதைவிட மற்றொரு வழி யுமிருக்கிறது. முருகா, நான் கல் லிலே அரவிந்தம் நடவில்லை. என் மனமாகிய கல்லிலே உன் பதங்களான அணியார் அரவிந் தம் மலர வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறேன்.

அரை நிமிடநேரமேனும் உனது தாள்களில் இலயிக்க மறுக்கும் சடகசட மூட மட்டி மனந்தான் என்னுடையது. அந்தத்திண்மை யான மனக்கல்லில் உன் பாதார விந்தம் அரும்பினால் அந்தக் கணமே அதில் திரண்டு கிடக்கும் தீமைகளெல்லாம் மறைந்துவிட அது தண்மையும் மென்மையும் வெண்மையும் கொண்டதாக மாறி விடுமே. '' நான் '' என்ற ஒன்றே இல்லாது போய்விடுமே. அந்தப் பேரானந்த நிலைக்கு ஆசைப்படுவதில் என்ன தவறு? முருகா, என் ஆசை நிறை வேறுமா? எனது கல்மனத்திலே உன் பாதார விந்தம் மல்வதெப் போது?

## "ஆசையோ தீரவில்லையே"

என்னதான் இருந்தாலும் உன்னை மறந்திட
என்னால் முடியவில்லையே - முருகா!
முன்னைநான் பலமுறை உன்னிடம் வந்த போதும்
இன்னமும் ஆசையோ தீரவில்லையே - முருகா!
சின்னதாய் வீடொன்று இருக்கவே கேட்டிட
பென்னம் பெரியதாய் தந்துவிட்டாய் முருகா
அன்னமும் ஆயுளும் தந்துவிட்டால் என்றும்
உன்னையே பாடியிங்கு உள்ளவரை வாழ வைப்பேன்

கே. எஸ் சிவஞானராஜா

★ சோதனைகள் தான் மனிதனின் அறிமுகம். ★

உ

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்

கிருஷ்ண பரமாத்மா நல்லோரைக் காத்து, தீயவர்களை அழித்து, தர்மத்தை நிலை நாட்ட அவதரித்த தினம் ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி. மகாவிஷ்ணு தீமைகளை ஒழித்து, தர்மத்தை நிலைநாட்டுவதன் பொருட்டு யுகங்கள் தோறும் அவதரித்தார்

''பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்த்தாபானார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே''

மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம் பரசுராம அவதாரம்,ராம அவதாரம், பலராமன் கண்ணன் அவதாரம், பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரம் அதர்மத்தை அழித்து, புவியைக் காக்க இனி எடுக்கவிருக்கும் அவதாரம். ஸ்ரீகிருஷ்ண அவதாரம் கடைசியாக நடந்தது. உலகம் போற்றும் உத்தம அவதாரம் கிருஷ்ண அவதாரம். சிறப்பும், பெருமையுமுடையது. அசுரர்களின் கொடுமையையும், அட்டூழியங்களையும் பொறுக்க முடியாத பூமித்தாயின் கண்ணீரைத் துடைக்க பூபாரம் குறைக்க, ஆதிபரம புருஷர் பகவான் கிருஷ்ணர் தானே நேரில் பரிபூரண அவதாரமாகப் பூமிக்கு வந்தார்.

மதுராவைக் கம்ஸன் அரசாட்சி செய்தான். சுயநலத்தின் காரணமாக மக்களை, சாதுக்களை, யாதவர்களைத் துன்புறுத்தினான். கம்ஸனின் கொடுமையால் பரிதவிக்கும் மக்களைக் காக்கவே பகவான் வடமதுரை மைந்தனாகத் தோன்றினார். தேவர்களெல்லாம் பசுக்களாகவும், ஆயர்களாகவும், நாராயணர் கட்டளைப்படி பூமியில் பிறந்தனர். வாசுதேவர் இல்லத்தில் வாசுதேவனாகப் பகவான் அவதரித்தார். வாசுதேவரின் மூத்தமனைவி ரோகிணி கம்ஸனுக்குப் பயந்து கோகுலத்திலே நந்தகோபன் வீட்டிலே தஞ்சம் புகுந்து, யசோதையின் பாதுகாப்பிலிருந்து, அனந்த சயனத்தின் அவதாரமாகிய பலராமரைப் பெற்றெடுத்தாள்.

★ நல்லதையே பேசு அல்லது மௌனமாக இரு ★

வாசுதேவர் பின்பு கம்ஸனின் பிரியத்திற்குகந்த சகோதரியாகிய தேவகியைத் திருமணஞ்செய்தார். மணமக்கள் ஊர்வலமாக தேரில்வருகின்றனர். கம்ஸன் தேரைச் செலுத்தி வரும்போது, ஆகசவாணி எச்சரித்தான். இவளுடைய திருவயிற்றிலே பரமாத்மாவே எட்டாவது பிள்ளையாக அவதரித்து உன்னைக் கொல்லப் போகிறார் என்றது அசரீரி. உடனே தேவகியின் தலையை வெட்டப் புறப்பட்டான் கம்ஸன். உடனே வாசுதேவர் தடுத்து நிறுத்தி, இவளுடைய பிள்ளைதானே உன் எதிரி. இவளுக்குப் பிறக்கிற குழந்தைகளை உன்னிடமே தந்து விடுகின்றேன் என்றுவாக்குறுதி அளித்தார். இருவரையும் சிறையில் அடைத்து குழந்தைகள் பிறக்கப்பிறக்க ஆறுகுழந்தைகளைக் கொன்று விட்டான். 7வது குழந்தை பெருமான் கட்டளைப்படி மாற்றப்பட்டது. எட்டாவது முறை தேவகி கர்ப்பமானாள். கம்ஸனுக்குப் பயம் தொடங்கிவிட்டது.

தேவகி ஜகம் முழுவதையும் தன் உதரத்தில் அடக்கிய ஜகந்நாதனை தன் உதரத்தில் தாங்கும் பேரருள் பெற்று, புதுப்பொலிவுடன் பெருமான் சிந்தனையோடு பேரானந்தத்தில் லயித்திருந்தாள். கண்ணன் திருவவதாரஞ் செய்யும் நேரம் வந்தது.

ஆவணிப் பெருநாளில், ரோகிணித் திருநாளில், அஷ்டமித் திதியிலே, இருளின் நடுவே பேரொளியாக, சங்கு சக்ரதாரியாக பீதாம்பரமணிந்து, கார் மேகம் போல் ஒளி வீசி, வைடூரிய மகுடமும், விலை மதிப்பற்ற ஆபரணங்களும் உடல் முழுவது மணிந்து சர்வாலங்கார பூஜிதராக, பூரணசந்திரன் போல் அற்புதமான குழந்தையாகத் தோன்றினார். பிரவுவான கிருஷ்ணர் தோன்றிவிட்டாரெனப் புரிந்து வாசுதேவர் பரவசமாகி, சிரம்தாழ்த்திக் கைகூப்பித்தொழுதார். தேவகியும் முழுமுதற் கடவுளாகிய புருஷோத்தமனை தங்கள் புதல்வராகத் தோன்றிய நாராயணரைப் பிரார்த்தனை பண்ணி மகிழ்ந்தாள். பின்பு கம்ஸனின் அட்டூழியங்களைக் கூறி நீர் பிறந்திருப்பதை அறிந்தால் தீங்கு செய்வான். எனவே சாதாரண குழந்தையாக வடிவத்தை மேற்கொள்ளும்படி வேண்டினர். பகவானும் தனது பூர்வவிருத்தாந்தங்களையெல்லாம்கூறி, என்னைக் கோகுலத்துக்கு உடனடியாக கொண்டு சென்று யசோதைக்குப் பிறந்த பெண் குழந்தைக்குப் பதிலாக வைத்துவிட்டு, அந்தப்பெண் குழந்தையை எடுத்து வரும்படி கட்டளையிட்டார். பின்பு பெற்றோருக்குப் பணிந்து, கிருஷ்ணர் அன்றலர்ந்த நீலத் தாமரை போல் குழந்தை வடிவில் உரு

★ அடுத்தவர் சொல்லுவதைக் கவனிக்கப் பழகுங்கள். ★

வத்தை மாற்றிக் கொண்டு மௌனமாகிவிட்டார்.

உலகம் போற்றும் உத்தமன், மாயன், அற்புதபாலன், பகவான் கிருஷ்ணர் அவதாரஞ் செய்தபோது, வானவர் பூமழை பொழிந்தனர். ரோகிணி நட்சத்திரம் விண்ணிலே தோன்றியது. கிரகங்கள் நல்லநிலையிலே தம்மைத்தாமே நிலைப்படுத்திக் கொண்டன. நதிகளில் நீர் நிரம்பி ஓடியது. ஏரிகளில் அழகிய தாமரை மலர்கள் பூத்திருந்தன. சுகந்தமான பூக்கள் எல்லாம் மலர்ந்து நறுமணம் வீசின. கந்தருவர், கின்னரர்கள் கீதம் இசைத்தனர். மகா முனிவர்கள், சித்தர்கள் மகிழ்ந்து மலர் தூவி புருஷோத்தமனைத் துதித்தனர். விண்ணும், மண்ணும் மகிழ்ந்தது.

அந்த நள்ளிரவிலே நந்த கோபர் வீட்டிற்கு எம்பெருமான் கட்டளைப்படி வாசுதேவர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போகிறார். தலையிலே குழந்தையை வைத்ததும் சிறைக்கதவுகளின் பூட்டுக்கள் தாமே கழன்று விடுகின்றன. தலைப்புத்திக்குரிய இடம். புத்திக்குப்பகவான் தொடர்பு கிடைத்ததும் சம்சாரபந்தனம் என்ற கட்டு அறுந்து போகிறது. பகவானைத் தலையில் கொண்டவர்க்கு மோட்சவாயில் திறந்து விடுகிறது. யமுனை ஆற்றைக் கடந்து நந்த மகாராஜாவின் அரண்மனையில் யசோதையின் பக்கத்தில் குழந்தையை வைத்து விட்டு. யசோதைக்குப் பிறந்த பெண்குழந்தையை எடுத்துக் கொண்டு மதுரா சிறைக்கு வருகிறார். கம்ஸன் குழந்தைபிறந்த செய்தி அறிந்து வந்துபார்க்கிறான். பெண்குழந்தையாக இருந்தது. அதனைக் கொல்ல முற்பட்டபோது அக்குழந்தைவானில் கிளம்பி, வைஷ்ணவி தேவியாகக் காட்சியளித்து, ''உன்னைக் கொல்ல தேவகி மைந்தன் ஏற்கனவே பிறந்து விட்டான். வேறு இடத்தில் வளருகிறான்'' என்று எச்சரித்து மறைந்தது.

(தொடரும்...

முதலில் இறைவனைத் தேடு; பிறகு உலகப் பொருளைத் தேடு இதற்கு மாறாகச் செய்யாதே. ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு நீ உலக வாழ்க்கையில் நுழைந்தால் உனக்கு மனச்சஞ்சலமே இராது

இரவில் வானில் பல விண்மீன்களைக் காண்கின்றாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை தென்படுவதில்லை. ஆதலால் பகற்பொழுதில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞானகாலத்தில் நீ இறைவனைக் காண முடியாததனால் இறைவனே இல்லை என்று சாதிக்காதே

★ அழகற்ற அகத்தைவிட, அழகற்ற முகம் மேல். ★

உ

# கோளறு திருப்பதிகம்

கு. கனகரத்தினம்

எடுத்ததுக்கெல்லாம் நேரம் காலம் பார்க்கும் மக்கள் அந்த அறியாமையின் நீங்கித் துணிவு கொள்ளக் கோளறுபதிகம் உதவுகிறது. அந்தத் திருப்பதிகத்தைப் பாராயணஞ் செய்து குறைகளைப் போக்கிக்கொள்ளலாம். கிரகங்களின் தாக்கத்தினின்று தப்பிக்கொள்ளலாம் என்பதைப் பலரும் அறிவர். இந்தப் பதிகத்தைப் பாராயணஞ்செய்து பயனடைந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். பயன் அடையலாம் என்பதைத் திருஞானசம்பந்தப் பெருமானே ஒவ்வொரு திருப்பாடலிலும் "ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல" என நாலு முறை நல்ல என்ற சொல் மூலம் உறுதிபடக் கூறியுள்ளார்." அடியார்க்கு மிகவும் நல்ல எனவும் கூறியிருக்கிறார். தமது குறைகளைப் போக்க விரும்புவோர் ஒவ்வொரு திருப்பாடலிலும் வரும் அம்மை, அப்பன் திருக்கோலத்தை மனத்திலே தியானிப்பது சாலச் சிறந்ததாகும்.

திருஞானசம்பந்தப் பெருமான் அப்பர் பெருமானோடு திருமறைக்காட்டில் இருந்தார். அப்போது மங்கையர்க்கரசி அம்மையாரின் வேண்டுகோளின்படி பிள்ளையாரை அழைக்க வந்தவர்களுடன் திருஞானசம்பந்தப் பெருமான் புறப்பட எழுந்தபோது, அப்பர் அன்று நாள் நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்டிப் பெருமான் புறப்படுவதைத் தடுத்தார். அந்தச் சமயத்தில் தம்பொருட்டு மட்டுமன்றி நாமும் பாடி உய்வுற ஞானசம்பந்தர் இந்தப்பதிகத்தைப் பாடியருளினார் இந்தப்பதிகத்தை நாம் தினமும் பாடிப் பயனடைவோமாக.

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழம்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

★ அறிவற்ற அச்சம் இடையூறுகளை இரட்டிக்கிறது. ★

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட் டொடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி ஜெயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

மதிநுதல் மங்கை யோடு வடவா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடு முருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்

கோளரி யுழுவை யோடு கொலை யானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியு மப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூ டிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன் றனோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேட மாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

கொத்தலர் குழலி யோடு விஜயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந் நெல்துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னாதி யாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை யோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே.

திருச்சிற்றம்பலம்

இப்பாடல்களை அன்புமிக்கு, அகம் குழைந்து, மெய் சிலிர்த்துப் பாடுவோமானால் எமது இன்றைய துன்ப நிலைகள் போம் என்பது உறுதி.

# இந்து என்பவன் யார்?

சுவாமி விவேகானந்தர் கூறியவை

★ இந்து என்ற பெயரைக்கேட்டவுடன் உங்கள் உள்ளத்தில் மின் சாரம் பாய்ந்தது போன்ற உணர்ச்சி பொங்குகிறதா? அப்போது தான் நீங்கள் ஓர் இந்து என்று கூறிக்கொள்ளலாம்.

★ இந்து என்று அழைக்கப்படும் மனிதன் துயரத்தில் ஆழ்ந்திருப் பதைக் காணும் போது உங்களுடைய சொந்த மகனே துயரப் படுவது போல் வருந்துகிறீர்களா? அப்படியென்றால்தான் நீங் கள் ஓர் உண்மையான இந்து

★ இறைவனிடம் உள்ள அன்பினால், பக்தியினால்தான் இந்துக் கள் இறைவனை வழிபடுகின்றனர்; இறைவனிடமிருந்து பெறப் படும் நன்மைகளுக்காக அல்ல.

★ வேதங்களில் கூறப்பட்டுள்ள துணிகரமான தத்துவங்கள், நன் னெறி சார்ந்த அறிவுரைகள் மற்றும் இறைத்தியானம் ஆகியவை தான் இந்து சமயத்தின் அடிப்படை அம்சங்கள்

★ இந்து அகநோக்கு உள்ளவன்; ஏனெனில் அவன் வெளியுலகைத் தன்னில், தன் மூலமாகக் காண விழைகிறான்

★ ஆத்மாதான் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. இந்த உண் மையை உணர்ந்திருப்பதால் தான் இந்துக்கள் அனைத்து மதங் களுக்கும் ஆதாரமாக விளங்கும் பேருண்மையை உணர்ந்துள்ள னர்

உ

[தொடர்ச்சி—

# 17 - 02 - 2002 இல் இருந்து நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | |
|---|---|
| இ. மயில்வாகனம் நெடியகாடு வல்வை | 500 00 |
| R. சுமிக்கா யப்பான் | 5000 ... |
| அ. பரமநாதன் மயூரன் மயிலனி | 300 ... |
| து. சுந்தரதாஸ் உதயா குடும்பம் லண்டன் | 20000 ... |
| சுசீலா நகைமாடம் பருத்தித்துறை | 2000 ... |
| ம. ஸ்ரீகாந்தன் அச்சுவேலி தெற்கு | 5000 ... |
| V. பொன்னம்பலம் | 500 ... |
| மனோகரன் திருமால் மருகன் (இ மி. ச.) கனடா | 3000 ... |
| தயானந்தன் சுஜந்தன் பீரிஸ்லேன் கொக்குவில் | 7000 ... |
| திருமதி P. சபாரட்ணம் தெகிவளை | 5000 ... |
| தங்கராசா தங்கேஸ்வரன் கம்பர்மலை | 1000 ... |
| கரன் உரும்பராய் | 3500 ... |
| S. சிவலிங்கராசா கொக்குவில் கிழக்கு | 2மூடை அரிசி 25Kg பருப்பு |
| ஆ. ஜெகநாதன் (அதிபர்) பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| மு. கணேஸ் இணுவில் | 1 மூடை அரிசி 10 Kg பப்படம் |
| S. V. M. தியாகு யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஸ்ரீ. நதியா நகைமாடம் யாழ்ப்பாணம் | 2000 ... |
| பொ. வெங்கடேஸ்வரன் வல்வெட்டித்துறை | 1000 ... |
| சிவஞானம் கிருபாகரன் சிவசக்தி கோவிலடி அச்சுவேலி | 2000 ... |
| செல்லத்துரை ரூபன் உடுவில் | 500 ... |
| மு. விஜயரெத்தினம் காட்டுப்புலம் தொண்டைமானாறு | 5000 ... |
| இ. நடராசா (வேலாயுதம்) தாவடி | 10400 ... |
| ஆ. சுந்தரலிங்கம் தபால் திணைக்களம் யாழ் | 1000 ... |
| மு. கணேஸ் இணுவில் | 2மூடை அரிசி |
| S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் யாழ் | 1000 ... |
| விபுலானந்தன், விக்னேஸ்வரன் } வளர்மதி புடவை நிலையம் யாழ் | 10000 ... |
| திரு / திருமதி இராமச்சந்திரன், கரவெட்டி | 1000 ... |
| ம. ஸ்ரீகாந்தன் அச்சுவேலி தெற்கு | 1000 ... |
| க. சற்குணச்செல்வன் நெதர்லாந்து | 10000 ... |
| பரராசசிங்கம் குடும்பம் (அப்புத்துரை) வல்வெட்டி | 1000 ... |

★ உண்ணும்போது மௌனமாய் இருக்கப்பழகு ★

| | | |
|---|---|---|
| Dr V. குகமூர்த்தி நாவலர் வீதி யாழ் | 1000 | ... |
| சி. பொன்னையா இலகடி வீதி கரவெட்டி மத்தி | 1000 | ... |
| செல்வி. மு. ராதை தும்பளை பருத்தித்துறை | 2000 | ... |
| கோ. சின்னத்தங்கச்சி நயினாதீவு | 5000 | ... |
| திருமதி கதிர்மகள் பாலேந்திரன் கனடா | 3000 | ... |
| த. தர்மகுலசிங்கம் கைதடி | 1000 | ... |
| சிவபாலன் குடும்பம் பிரான்ஸ் | 10000 | ... |
| சண்முகம் சத்தியமூர்த்தி கனடா | 500 | ... |
| S. செல்லத்துரை கொக்குவில் கிழக்கு | 2000 | — |
| வெஸ்ரன் ஜுவலறி லண்டன் | 10000 | ... |
| நிருஷான் சேகரன் தெகிவளை | 1000 | ... |
| கு. தியாகராஜ சர்மா (நீர்வைமணி) நீர்வேலி 1 மூடை அரிசி | 1500 | ... |
| M. K. ஆறுமுகம் நவிண்டில் | 1000 | ... |
| தேவன் ஸ்ரோர்ஸ் ஆவரங்கால் | 1 மூடை அரிசி | |
| சி. சின்னராசா வல்வெட்டி வல்வெட்டித்துறை | 1000 | ... |
| க. தங்கரெத்தினம் தாவடி | 500 | ... |
| நா. சந்திரசேகரம் அல்வாய் | 1000 | ... |
| ஐ. இராமச்சந்திரா லவ்லேன் உடுவில் | 1000 | ... |
| சி. மகாலிங்கம் J. P. மலையன் தோட்டம் வல்வை | 1000 | ... |
| சுசீலா நகை மாடம் | 1500 | ... |
| மு. கணேசு | 1 மூடை அரிசி பப்படம் | |
| வேலாயுதம் வரதராஜன் வீரப்பராயன் கரணவாய் தெற்கு | 1000 | ... |
| சிவராசா துன்னாலை கோவிற் கடவை | 2000 | ... |
| க. சிவஞானசுந்தரம் அச்சுவேலி வடக்கு | 1000 | ... |
| S. A. பரமானந்தம் 7 லேன் கொழும்பு | 1000 | ... |
| நல்லையா சுப்பிரமணியம் இணுவில் | 2000 | ... |
| திரு, திருமதி. நவரெத்தினம் லண்டன் | 50000 | ... |
| இலவச வைத்திய சேவை வகையில் திருமதி தங்கமுத்து கந்தையா அன்னை இல்லம் வியாபாரிமூலை | 2000 | ... |
| Dr. p. சிவபாலன் கொழும்பு | 1000 | ... |
| சி. குமாரசாமி பேக்கறி (மயிலிட்டி) மானிப்பாய் | 2000 | ... |
| திருமதி ச. நந்தகுமார் மாரீசன் கூடல் | 2000 | ... |
| நரேந்திரன் பாஸ்கரதேவி ஆவரங்கால் | 1000 | ... |
| வை. ஆறுமுகம் அதிபர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி | 2000 | ... |
| Dr S. குகதாஸன் கண்வைத்திய நிபுணர் | 3000 | ... |
| ஐ. தங்கேஸ்வரன் இலங்கை வங்கி கொழும்பு | 500 | ... |
| K. ரவி சுவிஸ் | 1000 | ... |
| V. மாணிக்கராசா வராத்துப்பளை | 1000 | ... |

[ வளரும்......

★ மனிதன் உயர்வது விதியால் அல்ல, ★

# ஔவையார் அருளிச்செய்த நல்வழி

காப்பு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

பதவுரை; கோலம்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே - அழகு செய்கின்ற உயர்வாகிய யானைமுகத்தையுடைய பரிசுத்தமாகிய இரத்தினம்போலும் விநாயகக்கடவுளே. நான் உனக்குப் பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து தருவேன் - அடியேன் உமக்குப் பாலும் தெளிந்த தேனும் வெல்லப்பாகும் பருப்பு மாகிய இந் நான்கையும் கலந்து நிவேதிப்பேன்; நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றுந் தா - நீர் அடியேனுக்குச் சங்கத்தில் வளர்க்கப்பட்ட (இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என்னும்) தமிழ் மூன்றையும் தந்தருளும் என்றவாறு

இதனது தாற்பரியம்! விநாயகக் கடவுளுக்குப் பூஜை செயின் முத்தமிழ்ப் புலமையும் உண்டாகும் என்பதாகும்

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.

ப - ரை; புண்ணியம் ஆம் - புண்ணியமே செய்யத்தக்கது, பாவம் போம் - பாவமே ஒழிக்கத்தக்கது, போன நாள் செய்த அவை - முற்பிறப்பிற் செய்த அந்தப் புண்ணிய பாவங்களே. மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - பூமியிலே பிறந்த மனிதர்களுக்கு (இப்பிறப்பில் இன்ப துன்பங்களை அநுபவித்தற்குக் காரணமாக) வைத்த பொருளாகும். எண்ணுங்கால் எச்சமயத்தோர் சொல்லும் ஈது ஒழிய வேறு இல்லை - ஆராயுமிடத்து எந்தச் சமயத்தார் சொல்வதும் இந்தப் பொருளேயல்லாமல் மற்றொன்றுமில்லை; தீது ஒழிய நன்மை செயல் (ஆதலினாலே) பாவம் நீங்கப் புண்ணியத்தைச் செய்க எ - று.

இ - ம்! இன்பத்துக்குக் காரணம் புண்ணியமும், துன்பத்திற்குக் காரணம் பாவமுமாதலிற் பாவத்தை ஒழித்துப்புண்ணியத்தைச் செய்க. எ - ம்.

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

ப - ரை. சாற்றுங்கால் மேதினியில் சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை - சொல்லுமிடத்துப் பூமியிலே (உயர்வாகிய சாதியென்றும் இழிவாகிய சாதியென்றும்) சாதி இரண்டேயல்லாமல் வேறில்லை. அவ்விரண்டு சாதியாரும் யாவரெனின்; - நீதி வழுவா நெறிமுறையின் இட்டார் பெரியோர் - நீதி தவறாத நல் வழியிலே (நின்று கொண்டு முறைமையோடு சற்பாத்திரங்களாயுள்ளவருக்குக்) கொடுத்தவரே உயர்வாகிய சாதியார், இடாதோர் இழிகுலத்தோர் அங்ஙனம் கொடாதவரே இழிவாகிய சாதியார், பட்டாங்கிலுள்ள படி - உண்மை நூலின் உள்ள கிரமம் (இதுவேயாம்) எ - று.

இ - ம். சற்பாத்திரத்துக் கொடுத்தவரே உயர்வாகியசாதியார், கொடாதவரே இழிவாகிய சாதியார் எ - ம்

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே - இடுங்கடுக
உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

ப - ரை; இயல் உடம்பு இது - திரிகின்ற இந்த உடம்பானது, இடும்பைக்கு இடும்பை அன்றே பல துன்பங்களாகிய சரக்குகளுக்கு நிறைத்துவைக்கும் பயன்றோ. இடும் பொய்யை மெய் என்று இராதே. (போசனத்தை) இடுகின்ற நிலையில்லாததாகிய இந்த உடம்பை நிலையுடையதென்று நம்பி இராமல், கடுக இடும் - சீக்கிரம் (சற்பாத்திரங்களாயுள்ளவர்களுக்குக்) கொடுங்கள்: உண்டாயின் - (இத்தருமம் உங்களிடத்து) உண்டாயின், பெருவழி நோய் விண்டாரைக் கொண்டாடும் வீடு - பெரிய வலிமையுடைய மல நோய் நீங்கியவரை மெச்சிக்கொள்கின்ற முத்தியானது, ஊழியன் உண்டாகும்- முறையினாலே (உங்களுக்குக்) கிடைக்கும் எ - று.

இ-ம்: நிலையில்லாத உடம்பு உள்ளபொழுதே சற்பாத்திரத்திலே தானஞ் செய்தவர்க்கு, அந்தத் தருமத்தினாலே சற் குருவினது திருவருளும் அந்தத் திருவருளினாலே ஞானமும், அந்த ஞானத்தினாலே முத்தியும் சித்திக்கும் எ - ம் (தொடரும்...

★ குறை என்பது மனதில்தான் இருக்கிறது ★

உ

# சித்தர்கள் கூறும் கடவுள் கொள்கை

செல்வி அ. ஆனந்தராஜா

சித்தர்கள் எனப்படுவோர், உள்ளத்தினால் உயர்வடைந்தவர்கள் சித்தம் என்றால் உள்ளம் அல்லது மனம் என்று பொருள்படும். இச்சித்தத்தில் கடவுளைக் கண்டவர்கள், அல்லது சாதாரண மானிடர்களை விட அசாதாரண சக்தியைப் பெற்றவர்களை நாம் சித்தர்கள் என்று கூறுகின்றோம். இந்தியாவில் பதினெண் சித்தர்கள் பற்றியும், ஈழத்தின் யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் போன்ற சித்தர்கள் பற்றியும் நாம் அறிந்து இருக்கின்றோம். இவர்கள் கடவுளை தமது உள்ளத்தில் தான் கண்டார்கள். இதனால் கோவில் வழிபாடு மற்றும் கிரிகைகள் பற்றி இவர்கள் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. இக் கருத்தை நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர்கூட எமது உடலினையே கோவிலாக உள்ளதை தமது திருப்பதிகத்தில் கூறியிருப்பது அவதானிக்கத் தக்கது.

‘‘ உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பெருமானுக்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணிவிளக்கு’’

எமது உள்ளம் அல்லது மனம் தான் பெரிய கோவில் அதில் நாம் சாப்பிடும் மற்றும் கதைக் கப்பயன்படும் வாய் கோபுர வாசல் போன்றது என்றும் கோபம் அழுக்காறு, பொறாமை வஞ்சனை இல்லாத தெளிந்த நிர்மலமானவர்களின் உயிரே சிவலிங்கம், எமது புலன்கள் ஊறு, செவி, கண், காது மூக்கு இவை ஐந்தும் மணிவிளக்குகள் என்று கூறுகின்றார்.

ஒவ்வொரு உயிர்களிடத்தும் இறைவன் உறைந்துள்ளான இதனையறியாது மனிதன் அறியாமையால் உயிர்களைத் துன்புறுத்துகின்றான் - தனது செயல்களினாலும், சொற்களினாலும், உயிர்களில் ஆடு, மாடு முதல் மனிதன் ஈறாக அவற்றுக்கு ஊறுவிளைவிக்கின்றான். இவ்வாறு உயிர்களைத் துன்புறுத்திவிட்டு இறைவனைச் சந்தோஷப் படுத்துகின்றேன் என்று கோவில்

★ அடகு வைப்பதைவிட விற்றுவிடுவது நல்லது ★

களிற்கு சென்று அபிடேகம், அர்ச்சனைகள், செய்கின்றான் இது தனது உள்ளத்தில் உறைந்துள்ள இறைவனைக் கவனிக்காது அவனின் அறியாமையின் செயல் அன்றி வேறில்லை.

மேற்கூறிய கருத்தை பதினெண் சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர் பின்வருமாறு கூறுகின்றார்.

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொண என்று சொல்லுமந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"

அதாவது நாம் ஒருகல்லைத் தெய்வம் என்று சொல்லி பூ வைத்து மந்திர உச்சாடனம் செய்து அதனைச் சுற்றிச் சுற்றி வந்து வணங்குகின்றோம் நாம் நட்டகல்லும் ஒரு நாளும் எம்முடன் கதைக்காது. இறைவன் எங்கே இருக்கின்றார் என்றால் அது எமது உள்ளத்தில். இது நாம் அறுசுவை உண்டியை சட்டியில் சமைத்துச் சாப்பிடும் போது சட்டிக்கு அதன் சுவைகள் தெரிவது இல்லை ஆனால் சாப்பிடும் எமக்கு சுவை தெரிகின்றது. அது போலவே கல்லைக் கடவுள் என்று வணங்குவதிலும் எமது உள்ளத்தில் உள்ள இறைவனை உணர நாம் முயலவேண்டும் என்று கூறுகின்றார்.

அவர் தனது இன்னொரு பாடலில்,

"கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துள்ளே
ஆவது மழிவதும் இல்லை இல்லை இல்லையே"

என்று கோயில் எமது மனத்துள் இருக்கின்றது என்று கூறுகின்றார்,

பதினெண் சித்தரில் ஒருவரான கடுவெளிச்சித்தர் அவரது பாடலான ஞானக்கும்மியில்

"பூட்டைத் திறப்பதுங் கையாலே - மனம்
பூட்டைத் திறப்பது மெய்யாலே
வீட்டைத்திறக்க முடியாமல் விட்ட
விதியிதென்கின்றார் ஞானப்பெண்ணே"

★ நன்றியுணர்வு தான் நெருங்கிய உறவு. ★

எமது வீடுகளிலுள்ள பூட்டுக்களை திறப்புப் போட்டு கையால் திறக்கின்றோம் அது போல எமது மனத்திலுள்ள பூட்டைத் திறப்பதற்கு உடம்பையே திறப்பாகபாவித்து நல்ல விடயங்கள் செய்து எமது மனப் பூட்டைத் திறக்க வேண்டும் அதைவிட்டு 'இது விதி' என்று நாம் கலங்குவது தவறு என்று கூறுகின்றார்.

இன்னுமோர் சித்தர் அகப்பேய் என்பவர் தமது பாடலில்

''உன்னை யறிந்தக்கால் அகப்பேய்
ஒன்றையுஞ் சேராயோ
உன்னையறியும் வகை அகப்பேய்
உள்ளது சொல்வேனே'' என்கிறார்

நாம் எம்மை அறிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

ஈழத்து சித்தரும் 19ம் நூற்றாண்டில் எம்மில் சிலருடன் வாழ்ந்தவருமாகிய யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனையில்

''ஆக்கையே கோயிலாக
அகஞ்சிவ லிங்கமாக
நீக்கமற் றெங்கும் நிற்கும்
நிமலனே நமச்சிவாயவே'' என்கிறார்

யோகர் சுவாமிகள் தமது இன்னொரு பாடலில் ''உள்ளுவார் தங்கள் உள்ளத்தில் உள்ளான்'' என்று கூறுவதையும் நாம் அவதானிக்கத்தக்கது.

அங்கிங்கெண்ணாத அரும் பெரும் சோதியான இறைவன் எமது உள்ளத்திலேயே உறைகின்றான். இதனையறியாது எமது கர்மவினை உந்த நாம் இறைவனைத் தேடி அலைவது மடமை. திருநாவுக்கரசர் தமது திருப்பாடலில் இறைவனை உள்ளத்தில் கண்டதை ''தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனுந் தேடித் தேடலாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்'' என்று அழகாக கூறுகின்றார்.

நாமும் எம்மிலும் பிறரிலும் உறையும் இறைவனை உணர்ந்து சொல், செயல், சிந்தனை ஆகியவற்றால் நல்லதைச் செய்து எமது அகக்கண்ணைத் திறக்க முயலுவோமாக!

உ

# சந்நிதியான்

-ந. அரியரத்தினம்-



27-08-2003 பின் இரவு 2-30 மணியளவில் ஆரம்பித்த ஸ்ரீ செல்வச்சந்நிதி வருடாந்த உற்சவக்கொடி ஏற்றத்திருவிழாவில் பல்வேறு பகுதியிலிருந்தும் அடியார்கள் வந்து பக்திபரவசத்துடன் பங்குபற்றினர்.

குறிப்பிட்ட குடும்பத்தவர் குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்தவர்கள், குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எல்லைகளைக்கடந்து பல்வேறு பிரதேசங்களிலிருந்து பல்வேறு வகைப்பட்ட மக்கள் ஒன்று கூடி அந்தநாள் முழுவதும் கண் விழித்

திருந்து கொடியேற்றத்திருவிழா வில் பங்குபற்றியது ஒரு புதுமை யான காட்சியாகவே தென்பட்டது.

எமது சமயம், எமது ஆலயங்கள் எவ்வாறு எல்லாம் செயற்பட வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோமோ அவற்றை எல்லாம் செயற்படுத்துகின்ற விதத்தில் ஸ்ரீசெல்வச்சந்நிதி கொடியேற்றத்திருவிழா அமைந்திருந்தது.

அதாவது உண்மையான இறைவழிபாட்டினை உண்மையான பக்தியை, உண்மையான பண்பாட்டினை மக்கள் வெளிப்படுத்தி நின்ற காட்சிகளை எல்லாம் ஒருங்கே காணுகின்ற சிறப்பை கொடியேற்றத்திரு விழா கொண்டமைந்திருந்தது அனைவருக்கும் திருப்தியை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

இவ்வாறான பல்வேறு சிறப்புக்களை சந்நிதி உற்சவம் உள்ளடக்கியிருந்தாலும் தேர் உற்சவத்தின் பொழுது கட்டுத்தேர் நிலைகுலைந்து குடை சாய்ந்தது அனைவருக்கும் மிகுந்தவேதனை அளிக்கும் விடயமாக அமைந்து விட்டது.

தேர் குடை சாய்ந்தபொழுது அடியார்கள் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வலைகள் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத அளவு துன்பியல் உணர்வுகளைக் கொண்டிருந்த அதே நேரம் இந்த நிகழ்வு முடிவடைந்து நீண்ட நேரத்திற்குப்பின்பும் பல அடியார்கள் வாய்விட்டுக் கதறி அழுதவண்ணமிருந்த காட்சி உள்ளத்தை உருக்குவதாக அமைந்திருந்தது.

இவ்வாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி உற்சவத்தின் பொழுது தேர் குடைசாய்ந்திருந்த நிகழ்வு ஒரு பக்கம் கவலை தருகின்ற நிகழ்வாகக் கருதப்படுகின்ற அதேவேளை கட்டுத்தேர் குடை சாய்ந்த இடம் குடைசாய்ந்த விதம் போன்றவற்றை ஆழமாகச்சிந்திக்கும் பொழுது அங்கே சந்நிதியானுடைய திரு விளையாடல்கள் நிறைந்த இன்னொருபக்கமும் அதற்குள் இடம்பெற்றுள்ளதை நாம் உணரமுடியும்.

கட்டுத்தேரின் பாவனைக் காலம் முடிவடைந்து அல்லது அது பழுதடைந்து அது இயல்பாகவே குடைசாய்கின்ற நிகழ்வு ஒன்று நடக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒரு சம்பவமாகவே கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்த தவிர்க்க முடியாத சம்பவத்தில் எவை எவை நடைபெறாது தவிர்க்கப்பட வேண்டுமென்று நாங்கள் நினைக்கின்றோமோ அவற்றை எல்லாம் தவிர்த்து கலியுகக்கந்தன் ஒரு அற்புதத்தெய்வம் என்பதை அனைவருக்கும் வெளிப்

படுத்தியுள்ளது தான் உண்மையில் அதிசயமான விடயமாகும்.

சந்நிதியானுடைய தேர் குடை சாய்ந்த இடத்தையும் குடைசாய்ந்த விதத்தையும் நோக்கும் பொழுது கலியுகக்கந்தனின் கருணையை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

ஆலயத்தின் மேற்கு வீதியில் சரியாக வள்ளி அம்மன் வாசலுக்கு நேரே இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளமையும், தேரின் முன்பக்கத்திலுள்ள வலது பக்கச்சில்லு அச்சு முறிவடைந்ததுமே. இவ்வாறு அனர்த்தங்கள் எதுவுமே இடம் பெறாது தவிர்க்கப்பட்டதனுடைய முக்கிய தார்ப்பரியங்களாகும்.

சரியாக வள்ளி அம்மன் வாசலில் இந்த நிகழ்வு இடம் பெற்றதனால் தான் தேரின் முடி அந்த வள்ளி அம்மன் வாசலில் உள்ள கோப்பிசத்தில் தடைப்பட்டு முழுமையாக தேர் நிலத்தில் குடைசாய்ந்து விழாமல் காப்பாற்றப்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அதே நேரம் வலது பக்கச்சில்லில் பாதிப்பு ஏற்பட்டதனால் தான் தேர் வலது பக்கம் குடைசாய்ந்து கோப்பிசத்தில் மோதி அதில் தடைப்படும் வாய்ப்பு ஏற்பட்டது. உண்மையில் இந்த இடத்தைத் தவிர வேறு இடத்தில் இது நடந்திருந்தாலோ அல்லது இந்தச் சில்லு தவிர்ந்த வேறு சில்லில் பாதிப்பு ஏற்பட்டிருந்தாலோ நிலமைகள் மோசமானதாகவே இருந்திருக்கும்.

மேலும் எந்த விதமான உயிர்ப்பாதிப்புக்களோ மோசமான உடற்காயங்களோ ஏற்படக்கூடாதென்ற சந்நிதியானுடைய கருணை அடியவர்கள் மேல் ஆழமாகப் பதிந்திருந்ததை ஆதாரப்படுத்தும் ஏனைய விடயங்களையும் இங்கே குறிப்பிடுதல் பொருத்தமானது.

உதாரணமாக தேர் சாய்ந்து சென்று கோப்பிசத்தில் மோதிய பொழுது ஏறத்தாழ 20ற்கு மேற்பட்ட ஓடுகள் உடைந்து நிலத்தில் வீழ்ந்த பொழுதிலும் அலை மோதிக்கொண்டிருந்த அடியார்கள் எவருக்குமே எந்தக்காயமும் ஏற்படவில்லை என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

மேலும் தேர் வீதி உலா வருகின்ற பொழுது எம்பெருமானுடன் உடனிருந்த உற்சவ காலப்பூசகர் ஆ. சிவசண்முக ஐயர், ஆலயத்தின் மூத்த பூசகர் க. ஆறுமுகசாமிஐயர் ஆகிய இருவரும் செயற்பட்ட விதம் அவர்கள் எம்பெருமான் மீது கொண்டுள்ள பத்தியை வெளிப்படுத்தும் அதே நேரம் அவர்களுக்கு எந்த விதமான சிறிய காயங்கள் கூட இல்லாமல் சந்நிதியான் காப்பாற்றியது அவர்கள் மீது சந்நிதியான் கொண்டுள்ள

★ சொற்கள் குறைந்த பிரார்த்தனையே மேலானது ★

கருணையையும் வெளிப்படுத்தும் அற்புத நிகழ்வுகளாகும்.

தேர் சிறிது சிறிதாக குடை சாய்வதை உணர்ந்த இரு பூசகர் களும் தங்களை முழுமையாக மறந்த நிலையில் சந்நிதி யானுக்கு எதுவுமே நடக்கக்கூடா தென்ற உணர்வு மேலீட்டினால் எம்பெருமானை தங்கள் கை களால் அணைத்த வண்ணமும் எம்பெருமான் நிலத்தில் சரியக் கூடாதென்பதிலும் தம்மை முழு மையாக ஈடுபடுத்திக் கொண்டி ருந்தது பார்ப்போரை வியப் படையச் செய்வதாக இருந்தது.

சிவசண்முகஐயர் இரு கை களாலும் முழுமையாக எம்பெரு மானை அணைத்து நிற்க ஆறு முகசாமிஐயர் எம்பெருமானு டைய வெள்ளி மயில் வாகனத் தையும் எழுந்தருளி வேலவனின் வெள்ளிக்குடையையும் இறுக்கிப் பிடித்த வண்ணமும் இருந்தமை யால் எம்பெருமானுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவும் இல்லை நிலத்தில் சாய்கின்ற நிலையும் ஏற்படவில்லை.

மொத்தத்தில் இவ்வளவு அலைமோதுகின்ற அடியார்கள் மத்தியில் சந்நிதியானுடைய தேர் குடை சாய்ந்த பொழுதி லும் எவ்விதமான உயிரிழப்புக் களும் ஏற்படாதது மட்டுமன்றி குறிப்பிட்டுக்கூறக்கூடிய பாரிய காயங்களும் எதுவும் ஏற்பட வில்லை என்பது எவ்வளவு பெரிய அதிசய நிகழ்வு என்பதை தான் நாம் சிந்திக்க வேண்டும்.

குறிப்பாக பலாலியிலிருந்தும், இந்த ஆலயத்தின் அக்கரையிலி ருந்தும் ஆலயத்தை நோக்கி மோசமான ஷெல் வீச்சுகள் இடம் பெற்றபோதும் யாருக் கும் உயிர்ச்சேதம் ஏற்படாத அற்புதம் நடந்ததையும், ஆலயத் தின் பழைய முன்மண்டபம் பகல் நேரத்தில் நிலத்தில் அப்படியே குடை சாய்ந்த பொழுதும் யாருக் கும் உயிர்ச்சேதமோ காயங் களோ ஏற்படாத நிலையையும் அடியார்கள் இவ்விடத்தில் ஞாப கப்படுத்துவது பொருத்தமானது

ஆகவே நிகழ்வுகள் எல்லாம் உண்மையானவை ஆனால் உயிர்ச் சேதம் ஏற்படாதது மட்டும் தற் செயலானது என எவரும் கருதக் கூடாது. அது யதார்த்தத்திற்கு பொருத்தமற்ற கருத்தாகும்.

சந்நிதி ஆலயம் அற்புத மான ஆலயம். அங்கே அற்பு தங்கள் நடப்பதென்பது இயல் பான விடயம் அதனால் தான் அடியார்கள் கூட்டம் எப்பொழு தும் அங்கே அலை மோதிக் கொண்டிக்கிறது.

இங்கே நடப்பவை எல்லாம் நல்லதுக்கே நடக்கும்.

ஓம் முருகா!


★ புலன்களை அடக்கி ஆள்வதே நன்று ★

# சந்நிதியான் நூல் வெளியீடு

திரு. ந. அரியரத்தினம் அவர்கள் ஞானச்சுடர் மலரில் தொடராக எழுதிவரும் சந்நிதியான் என்ற கட்டுரையின் தொகுப்பு நூல் ஸ்ரீ செல்வச் சந்நிதி வருடாந்த உற்சவத்தின் பொழுது 07-09-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 - 30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக்கந்தனின் அற்புதங்களை உள்ளடக்கி தொடர் கட்டுரை ஞானச்சுடரில் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பது அடியார்கள் அறிந்ததே இந்தக் கட்டுரைகளில் 1998 ஆம் ஆண்டு வெளிவந்த கட்டுரைகள் 12 உள்ளடக்கப்பட்டதாக "சந்நிதியான்" என்ற தலைப்புடன் முதலாம் பாக நூலாக இது வெளியிடப்பட்டுள்ளது.

வெளியீட்டினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ லஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள் மங்களகரமாக வெளியீடு செய்து வைத்துள்ளார். சுவாமிகள் தனது வெளியீட்டு உரையில்



இலங்கையின் வடபாகத்தில் மட்டுமல்ல முழு உலகத்திலும் உள்ள அடியார்களுக்கு நிறைவான அருளை வழங்கி அவர்களைக் காத்து வருகின்ற கடவுளாக சந்நிதி முருகன் கருணை பொழிகின்றார் என்பதைத் தெரிவித்து, அந்தக் கடவுளின் அற்புதங்களை இந்த நூல் கருப்பொருளாகக் கொண்டு வெளிவருவது புண்ணியமான ஒரு கைங்கரியம் என்பதை எடுத்துக் கூறினார்கள்.

நூலின் ஆசிரியர் திரு. ந. அரியரத்தினம் தன்னுடைய அதிபர் பதவியையும் சிறப்பாகச் செயற்படுத்தி ஞானச்சுடரின்

★ வேகமாக முடிவெடுப்பதைவிட விவேகமாக முடிவுசெய் ★

வெளியீட்டிற்கு தனது காத்திரமான பங்களிப்பைச் செய்து வருவதுடன், சந்நிதியான் அற்புதங்களை தொடராக எழுதி வருகின்றார் என்றால் அது ஒரு அர்ப்பணிப்பான சேவை மனப்பாங்கினால் தான் இயலக் கூடிய காரியம் என்பதையும் சுவாமிகள் சுட்டிக்காட்டினார்கள். அவர் தனது கல்விச்சேவையின் 25வது வருட நிறைவுக்காலத்தில் இந்த தொகுப்பு நூலை வெளியிடுவது சாலப்பொருத்தமானது எனவும் குறிப்பிட்டார்.

மதிப்புரையை ஆசிரியர் ஆ. சிவநாதன் அவர்கள் வழங்கினார்கள். சந்நிதியான் அற்புதங்களை உள்ளடக்கி வெளியிடப்படும் இந்தத் தொகுப்பு நூல் ஒரு ஆத்மீக நூல் மட்டுமல்ல சந்நிதி தொடர்பான ஒரு வரலாற்று ஆவணமாகவும் இது பேணப்பட வேண்டியது என்பதை தனது ஆரம்ப உரையில் எடுத்துக் கூறினார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம குருக்கள், எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் அவர்கள், வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை போன்றோரின் ஆசி உரைகள் வாழ்த்துரைகள். அணிந்துரைகளுடன் இந்த நூல் வெளியிடப்படுவது இந்த நூலிற்கும் இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளுக்கும் சிறப்பையும் பொலிவையும் வழங்கி அடியார்களின் ஆவலைத் தூண்டுவதாக அமைந்திருப்பதையும் சிவநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும் தனக்கே இயல்பாக உள்ள தனித்துவமான பணியால் நூலில் இடம் பெற்றுள்ள அற்புதங்களையும் அனுபவங்களையும் அடியார்களுடனும் பகிர்ந்து கொண்டார்கள்.

நூலாசிரியர் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் ஆயிரக் கணக்கான அடியார்கள் அனுபவித்து வரும் அற்புதங்கள் அவர்களுடன் மறைந்து போகக் கூடாது என்பதுடன் அதனை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது காலத்தின் தேவை என்பதை எடுத்துக் கூறினார்கள். அத்துடன் எதிர்கால சந்ததியினருக்கும் எம்பெருமானின் அற்புதங்களை அறிவதற்கும் ஆத்மீக நாட்டம் கொள்வதற்குமான ஒரு வரலாற்று ஆவணமாகவும் இது பயன்படும் என்பதையும் அடியார்களுக்குத் தெரிவித்தார்.

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

*03 - 10 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

அறிமுகவுரை :- கு. அருணகிரிநாதன் [ ஆவரங்கால் ]

**சொற்பொழிவு :- " நெஞ்சகமே கோயில் "**

வழங்குபவர் :- சைவப்புலவர் சு. செல்லத்துரை (இளை. அதிபர்)

---

*10 - 10 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

**மாணவர்கள் நிகழ்வுகள்**

வழங்குபவர் :- யாழ் இளவாலை மெய்கண்டான் மகா வி.

---

*17 - 10 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

அறிமுகவுரை :- சிவ ஆறுமுகஸ்வாமி J. P.

**சொற்பொழிவு :- பெரிய புராணம் ( தொடர் )**

வழங்குபவர் :- சிரேஷ்ட விரிவுரையாளர் அ: குமாரவேல்
( யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை )

---

*24 - 10 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

அறிமுகவுரை :- செல்வி தம்பு சறோஜா (இளை. இசை. ஆசிரி ஆலோ.)

**விடயம் :- "இன்னிசை"**

வழங்குபவர் :- செல்வன் அ. கிருஷ்ணானந்தன் (நுண்கலைமாணி)

வயலின் :- செல்வி தே. சுஜாத்தா (நுண்கலை மாணி)

மிருதங்கம் :- செல்வன் வ. றமணா (கலாவித்தகர்)

முகர்சிங் :- K. நந்தகுமார் (கலாவித்தகர்)

---

*31 - 10 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# ஐப்பசி - 2003

வெளியீட்டுரை :- திருமதி யோகேஸ்வரி கந்தசாமி
[ஆசிரிய ஆலோசகர்]

மதிப்புரை :- நாச்சியார் செல்வநாயகம்
( முதுநிலை விரிவுரையாளர் பல்கலைக்கழகம் யாழ் )

பதிவு இலக்கம்;- Q. D. / 58 / NEWS / 2003

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2003 ஜனவரி- ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2004 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
செல்வச்சந்நிதி தொண்டைமானாறு